அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மை பத்திரிக்கை

நந்தன ❁ தை (ஜனவரி – 2013) விலை: ரூ.10/–

நிறுவனர்,
சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 3

2. மகான் பட்டினத்தார் ஆசி நூல் ........ 8

3. **புறபூஜையும் அகபூஜையும்**
– குருநாதர் அருளுரை ........ 15

4. அன்பர்களின் அனுபவ உரை ........ 36

5. ஆத்திசூடி – குருநாதர் அருளுரை தொடர் ........ 46

6. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 66

ஓங்காரக்குடில் ஆசான்

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம்**
**ஆசிபெறும் நேரம்**
**தினசரி காலை 11 மணி மற்றும் மதியம் 1 மணி**
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

தொட்டேன் சுத்த சைவமுறையை
தொலைத்தேன் அசைவ வழிமுறையை
விட்டேன் லாகிரி மதுவகையைஎன
விளம்பி மன உறுதி கொண்டு

கொண்டுமே சித்தர் வழிபாட்டை
குடியதனில் குறையில்லா நன்கு
உண்டாக்கி தொடர வேணுமப்பா
உயர்குரு அரங்கரை கண்டு

கண்டுமே தீட்சை உபதேசம்
கலியுகத்தில் அடைந்து நன்கு
தொண்டு செய்து தொடரவே
தூய்மைபடும் வாழ்வு வளம் காணும்

– மகான் பட்டினத்தார் ஆசிநூல்.

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தை கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்ரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள்செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 37 ஆண்டுகாலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு **தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில் தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைக்கொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

இந்த ஞானத்திருவடி நூலின் விற்பனை வருவாய் அன்னதானப்பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அன்புடன் – இரா.மாதவன்.

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு
R.**சுரேஷ்** – 94434 21935

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச் செய்யும் வள்ளல்,
சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கனராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக திருவாளர்கள் கே.எஸ்.கைலாசம், பத்மநாபன், சுபாஸ், ராமமூர்த்தி, ரெங்கநாதன், திருமுகம் மற்றும் திருவண்ணாமலை, பாண்டிச்சேரி, கோவை, பொள்ளாச்சி, செங்கல்பட்டு, வேதாரண்யம், விருதுநகர், மண்ணச்சநல்லூர், திருச்சி அன்பர்கள் நமது ஞானத்திருவடி மாத இதழை தினசரி பொதுமக்களுக்கு வினியோகம் செய்கிறார்கள்.

ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.

# ஞானத்திருவடி நூலிற்கு
# பற்றுகள் அனைத்தையும் வேருடன் களைந்த
# மகான் பட்டினத்தார் அருளிய ஆசிநூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன் M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் : **99655 71837**

1. அருவாகி உருவாகி அரூபமாகி
   அகத்தீசன் அவதாரம் கொண்ட யோகி
   மறுமை காணா தடுத்து மக்களை
   மண்ணுலகில் காத்திடும் சிவராச யோகி

2. யோகிநிலை கூட்டிட அறத்தை
   யோகமெனும் பசிப்பிணி விரட்டும்
   யாகமாகச் செய்திட்ட அன்னலே
   உன் அவதார சூட்சுமத்தை

(யோகம் என்பதே பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவதேயாகும். மற்றவைகளெல்லாம் ஜென்மத்தை கடைத்தேற்ற உதவாது. இதுவே யாகமும் வேள்வியும் ஆகும். மற்றபடி செய்கின்ற யாகங்களும் வேள்விகளும் ஜென்மத்தை கடைத்தேற்ற பயன்படாது.)

3. சூட்சுமத்தை உலகோர் அறிய
   சூட்சுமங்கள் தாங்கி உன் ஞானவழி
   மாட்சிமைபட வரும் ஞானத்திருவடிக்கு
   மண்ணுலகில் பட்டினத்தார் யானும்

4. யானுமே நந்தன தேளின் திங்கள்
   (நந்தன வருடம் கார்த்திகை மாதம்)
   உயர் ஆசிதனை எடுத்துரைப்பேன்
   ஞானத்தை சொல்லுகின்ற சூட்சும
   ஞானத்திருவடி இவை நூலில்

5. நூலதனில் உலக மக்களுக்கு
   நிலமதனில் வாழ வழி நடக்க
   காலமதின் சூட்சுமம் சிலதை
   கண்டுரைப்பேன் அறிந்துணர்வீர்

6. உணர்வுமிக்க கலியுகத்தில்
உண்மை அறிவு மாறுபட்டு
உணர்வு பெருக தீதான வழி
உன்னை அழைத்து மாய்த்துவிடும்

7. மாயை சூழ்ந்த லோகமிது
மன அழுத்தம் கூடி அவரவரை
சாய வைக்கும் வித்தைகளை
சாற்றிடுவேன் நவக்கோள்கள் நடத்தி வருகவே

8. வருகவே வாழ்வை எண்ணி
வருமுலகில் சிந்திக்கும் முன்னரே
இருளும் வினையும் கவ்வியே
எல்லா இடரும் கண்டு முடிகின்றார்

9. முடிவில்லா இவை அல்லல் அகல
மொழிகுவேன் உலக மக்கள்
அடிபணிதல் வேண்டும் பற்றற்ற
ஆன்ம ஞானம் கொண்ட தவசிகளிடம்

10. தவசியர் அருள் தயவதனை
தரணியிலே அடைய வழிமுறை
அவசியம் உரைப்பேன் இது காலம்
அவதாரம் காண்பதே உலக மக்களை

11. மக்களை அழிவினின்று காக்கவே
மண்ணுலகில் அன்னதனால் மக்கள்
ஊக்கம்பெற உண்மை ஞானி
உயர்தருமம் ஜீவதயை நோக்கும்

12. நோக்கும் கொண்டு நிலைப்பட
நிலவுலகை ஆக்கம் கருதியே
ஊக்கப்படுத்தி தருமத்தை
உறுதிபட செய்து பற்றறுத்த

13. பற்றறுத்த அரங்கமகா ஞானியை
பற்றுதல் வேண்டும் அய்யமற
சற்றென அவர் நிழல் கண்டு
சாய்ந்துவிட்டால் சுத்த சன்மார்க்கத்தில்

14. மார்க்கமதால் மாயை அல்லல் வினை
மார்த்தாண்டனை கண்ட பனி போல

(சூரியனைக் கண்ட பனி விலகுவதுபோல துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்தால் அவர்களின் மாயை அகன்று தெளிவு பிறக்கும்.)

பார்த்துரைப்பேன் விலகி ஓடுமப்பா
பாடிடுவேன் பற்றறுத்த ஞானிகளை

15. ஞானிகளை சரணடையும் காலம்
ஞாலமதில் தொடரும் தீதான
கனிவில்லா லாகிரி புலாலை
கட்டாயம் ஜீவ வதைகள் தன்னை

(ஒரு மனிதன் ஜென்மத்தை கடைத்தேற்ற வேண்டுமென்றால் போதை பொருள்வகைகளை நீக்கி உயிர்க்கொலை செய்வதை தவிர்க்க வேண்டும். இந்த வைராக்கியம் ஞானிகள் ஆசியில்லாமல் ஒருவனுக்கு வராது.)

16. தன்னிலே அகற்ற வேண்டுமப்பா
தருமவான் தவசியர் நிழலில்
உன்னை சரணடைத்து விட்டால்
உயர்த்தன்மை வளரும் நிலை மாறும்

(பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே முதுபெரும் தலைவன், ஞானத்தின் தோற்றம், ஞானமே வடிவானவன் ஒளிதேகம் படைத்தவர், உண்மைப் பொருளறிந்த முதல்வரும் ஞானத்தின் முன்னோடியுமான மகான் ஞானபண்டிதராகிய ஆறுமுகப்பெருமான் எனப்படும் முருகப்பெருமானும் அவரது முதன்மை சீடரும் ஞானிகளுக்கெல்லாம் தலைவரும் நவகோடிசித்தரிஷி கணங்களின் குருவானவரும் குருமுனியெனப்படும் மகான் அகத்தியரும், நவகோடி சித்தரிஷி கணங்களும் கூடி, கலியுக இடர்நீக்க கலிகாலத்தில் துறையூரில் ஓங்காரக்குடில் என்ற பெயரில் குடிலமைத்து அதற்கு ஞானத்தலைவனே அரங்கமகாதேசிகர் என்ற நாமம் தரித்து தலைமை ஏற்கவும், அவர் தலைமையில் குருமுனியாகிய அகத்திய மகரிஷியும் வழிவழி வந்த நவகோடி சித்தரிஷி கணங்களும் இயங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டு பெரும் அறப்பணிகளை செய்து ஞானிகள் தலைமையிலும், பாதுகாப்பிலும் நடந்து வரும் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்து சென்றாலே வருபவர்களது வினைகள் நீங்கி அவர்களிடம் உள்ள தீயபழக்க வழக்கங்கள் மாறி உயிர்வதை செய்தல் பாவம் என்ற உணர்வு மேலோங்கி ஜீவவதை செய்வதை விட்டு உயர்ந்த தன்மையை அடைவார்கள்.)

17. மாற்றமே காணும் மார்க்கம் வழி
மண்ணுலகில் அன்னதனால் மக்கள்
ஏற்றம் கொள்ள இன்றே
என் ஆசி படிக்கின்ற காலம் தொட்டே

18. தொட்டேன் சுத்த சைவமுறையை
தொலைத்தேன் அசைவ வழிமுறையை
விட்டேன் லாகிரி மதுவகையைஎன
விளம்பி மன உறுதி கொண்டு

19. கொண்டுமே சித்தர் வழிபாட்டை
குடியதனில் குறையில்லா நன்கு
உண்டாக்கி தொடர வேணுமப்பா
உயர்குரு அரங்கரை கண்டு

(மிகப்பெரும் கோடீஸ்வரனாக பிறந்து எல்லா செல்வங்களையும் பெற்ற பட்டினத்தாராகிய நான் பிறரைப்போல் தீய பழக்க வழக்கங்களை மேற்கொள்ளாது சுத்த சைவத்தை வாழ்க்கை இலட்சியமாக மேற்கொண்டு அசைவ உணவை அறவே நீக்கினேன், மதுபானங்கள் போன்ற போதைப்பொருள் வகைகளை கண்ணால் காண்பதே பாவம் என மனஉறுதிகொண்டு அவற்றை விலக்கினேன். இப்படி புலால் மறுத்தும், போதை பொருள்களைத் தவிர்த்தும் ஞானிகளை இடையறாது வணங்கியும் பெறுதற்கரிய பெருநிலையை அடைந்தேன். இப்படி ஞான நிலையை அடைய நான் கடைப்பிடித்த கொள்கையை நீங்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் துறையூர் ஓங்காரக்குடிலாசான் அரங்கமகாதேசிகரால் தொகுக்கப்பட்ட ஞானிகளின் நாமங்களை கொண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை திருவிளக்கேற்றி திருவிளக்கின் முன் அமர்ந்து குடும்பத்தில் உள்ள அனைவரும் மனமுருக அப்போற்றித் தொகுப்பை படித்தால் நான் கடைப்பிடித்த உயர்ந்த கொள்கைகளான ஞானக் கொள்கைகளை நாமும் கடைப்பிடித்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியம் உறுதிபட உண்டாகும்.)

20. கண்டுமே தீட்சை உபதேசம்
கலியுகத்தில் அடைந்து நன்கு
தொண்டு செய்து தொடரவே
தூய்மைபடும் வாழ்வு வளம் காணும்

21. காணுமே நாமுரைத்த மார்க்கம்
கை கூடும் அரங்கன் அருளால்
பேணவே பிரளய இடரினின்று
பூவுலக வாசிகள் காக்கப்படவே

22. காக்கப்படவே கட்டாயம் இவை உறுதி
கண்டுவிட வேண்டும் உலக மக்கள்
ஆக்கம் தரும் அரங்கஞானி துணைபட
அறம்தருமத்துடன் ஆசான் தொடர்பில் வர

23. வருங்காலம் வளமாகும் அவரவர்க்கும்
வல்லமை மிக்க அரங்கனாற்றல்
பெருங்கருணையாக உடனிருந்து
பிரளயத்திடரினின்றும் காக்குமப்பா

(உலக இடர் நீக்க அவதரித்த கலியுகப் பேராசான், கருணை வள்ளல், வள்ளலின் வழித்தோன்றல், பரப்பிரம்ம சொரூபமாய் வீற்றிருக்கும் அவதாரபுருஷர், பேராசான், குருநாதர் அரங்கமகாதேசிகரின் திருக்கரங்களால் தீட்சை உபதேசம் பெற்று ஞானிகள் சூழ்ந்து அருள்பாலிக்கும் அன்னதானத்தினால் மகிமை பெற்ற அன்னக்குடிலாம் ஓங்காரக்குடிலில் நடைபெறும் அறப்பணிகளுக்கு தொண்டு செய்தோ தம்மால் இயன்ற அளவு பொருளுதவி செய்தோ, ஆசானை வணங்கி வந்தால் மகான் பட்டினத்தாராகிய நான் கடைப்பிடித்த உண்மைக் கொள்கைகளை நீங்களும் இடைவிடாது கடைப்பிடிக்க தேவையான ஆற்றல் பெற்று எனது கொள்கைகள் உங்களுக்கும் கைகூடும்.

இப்படி மனிதனைத் தெய்வமாக்கும் இக்கொள்கைகளை கடைப்பிடித்து வாழும் மக்களுக்கு ஓங்காரக்குடிலாசான் அரங்கமகாதேசிகரின் ஆசியும், ஞானிகள் ஆசியும் கிடைத்து இவ்வுலகிற்கு ஏற்பட போகும் பெரும் இயற்கை சீற்றங்களாகிய பூகம்பம், நிலநடுக்கம், எரிமலைச்சீற்றம், கடல் கொந்தளிப்பு, பெருங்காற்று, சூறாவளி, பெருநெருப்பு, உலக வெப்ப மாற்றத்தினால் ஏற்படும் பேரழிவு போன்ற பெரும் இயற்கை சீற்றங்களிலிருந்து இவ்வுலக மக்கள் காக்கப்படுவார்கள் என்பது மகான் பட்டினத்தார் வாக்காகும்.)

24. காக்க காக்க அரங்கன் கருணை
கடக்க கடக்க செய்தமுன் தீவினை
ஆக்கம் கருதி உலக மக்கள்
அனுதினமும் செபதபம் தொடர

25. தொடரவே சடுதி மாற்றங்கள்
தேசிகன் அருளால் கிட்டுமப்பா
இடரகன்று வாழ எல்லா மக்களும்
ஈதூழில் அரங்க தேசிகாய நமஹ

26. நமஹ என போற்றி நின்று
நாட்டிடுவேன் கடைத்தேற்றிக் கொள்ள
நேமமுடன் வழிவகைச் சொன்னேன்
ஞான சூட்சுமத்தை தாங்கி வரும்

(ஓங்காரக்குடிலாசானும் ஆறுமுகப்பெருமானும் ஒன்றேயாகும். முருகப்பெருமானே ஓங்காரக்குடிலாசான் உருவில் அவதரித்திருப்பதால் அவர் வேறு, இவர் வேறு என்றெண்ணாமல் ஒன்றேயென எண்ணி தொடர்ந்து

ஞானிகளை வழிபட்டு வந்தால் அவரவர் செய்த முன்வினைகள் நீங்கி அவர்கள்படும் துயரங்களிலிருந்து விடுதலைப்பெற்று ஞான இரகசியங்களை அறிந்து கடைத்தேற வாய்ப்புள்ளது. எனவே குருநாதர் அரங்கமகாதேசிகரின் நாமத்தையும், ஞானிகள் நாமத்தையும் ஜெபித்து ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென மகான் பட்டினத்தார் கூறுகிறார்.)

**27.** தாங்கி வரும் இவை நன்னூல்
தவசியர் சுவாசத்தால் வருவது தன்னால்
ஓங்காரனருள் பெற்ற அரங்கனின்
உயர் சூட்சுமமும் சொல்லி வந்தேன்

**28.** சொல்லிய வண்ணம் என் வழியில்
சூட்சுமம் பல ஞானிகள் தொடருவர்
அள்ளிப் பருகித் தெளிவடைந்து
ஆன்ம லாபம் பெருக்கிக் கொள்வீர்

**29.** பெருக்கிடவே பெரும் பேறடையவே
பேசிடுவேன் அறிந்த சூட்சும
கருத்தான இவை நன்னூலை
கடைநிலை மக்களும் அறியும் வண்ணம்

**30.** வண்ணமுடன் பெற்று ஈபவர்கள்
வள்ளல் தன்மை யோகபலனை
திண்ணமுடன் கண்டு சிறந்திடுவர்
தேசிகன் அருள்பட வாழ்ந்திடுவர்

(ஞானிகள் ஆசியால் எழுதப்படுகின்ற ஞானத்திருவடி நூலை வாங்கிப் படிப்பவர்களும் பிறர் படிக்க வாங்கிக் கொடுப்பவர்களுக்கும் ஞானமும் கைகூடும், செல்வநிலையும் பெருகும், ஞானிகள் ஆசிபெற்று வளமுடன் வாழ்வார்கள்.)

**31.** வாழ்ந்திடும் ஞானி அரங்கனப்பா
வழங்கிடும் அவர் உபதேசம்
தாழ்விலா தாங்கி வருவது தன்னால்
தவசியை வணங்குவது போல் ஏற்று

**32.** ஏற்றுமே எந்நாளும் உடன்
ஏற்றம் கருதி வைத்திடவே
மாற்றம் பல காணுமப்பா
மறவாது ஞானிகள் நாமசெபம்

33. செபதபத்தை போற்றி வருதலுற
செயல் வேகம் காரிய சித்தி
அபாயம் அண்டா சிறக்குமப்பா
ஆக்கம் தரும் ஞான நூலிது

34. நூலதனை தொட்டு வணங்கி
நித்தம் வாசிப்பு கொள்பவர்க்கு
காலனும் எட்டா விலகி நிற்பார்
கண்டுரைத்தேன் சூட்சுமம் மக்களுக்கு

35. மக்களெல்லாம் சன்மார்க்க வழி வந்து
மரணமில்லாப் பெருவாழ்வு காண
சிக்கெனப் பிடிப்பீர் சிவராச அரங்கயோகியை
செப்பிவந்த ஞானத்திருவடிக்கு ஆசி முற்றே.

(ஞானத்திருவடி நூலை ஞானிகள் திருவடியாக எண்ணி மனமார பூசித்து ஞானிகள் திருவடியை தொடுவதுபோல மானசீகமாக ஞானிகளை எண்ணி தொட்டு வணங்கி பயபக்தியுடன் படித்தால் ஞானமும் கைகூடும், செல்வ நிலை பெருகும், எமபயமும் நீங்கும். ஞானத்திருவடி நூலை இடைவிடாது தொடர்ந்து படித்தும், ஞானிகள் நாமஜெபத்தை பூஜித்தும் வருபவர்கள் வாழ்வில் அபாயங்கள் வராது, எடுத்த காரியத்தை விரைந்து முடிப்பார்கள், எல்லா செயல்களிலும் ஞானிகள் ஆசியால் வெற்றி காண்பார்கள். இவ்வளவு நன்மைகள் தரும் ஞானநூலாம் ஞானத்திருவடி நூல் உலகெங்கும் பரவ உலகெங்கும் சன்மார்க்கம் பரவி உலகம் மேல்நிலை அடைந்து எங்கெங்கும் ஒளிமயமான, அமைதியான, உண்மையான வாழ்வினை மக்கள் வாழ்ந்து பெறுதற்கரிய பெரும் பேற்றினை பெறுவார்கள் என மகான் பட்டினத்தார் கூறுகிறார்.)

சென்னை திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள முற்றுப்பெற்ற மகானும், அழைத்தால் அக்கணமே அஞ்சேல் என்று சொல்லக்கூடிய ஆற்றல் பெற்ற **மகான் பட்டினத்தார் சந்நிதியில்** ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமைதோறும், **மாலை ஆறு மணியளவில்** ஞானியர் வழிபாடும், குருநாதர் அவர்களின் அருளுரைகள் ஒலிஒளி காட்சியாகவும் நடத்தப்படுகின்றது. அச்சமயத்தில் ஞானத்திருவடி நூல்கள் விநியோகம் செய்யப்படுகிறது. பூஜை முடிவில் ஞானிகளை பூஜித்த பிரசாதம் வழங்கப்படுகிறது. மேற்படி பூஜையில் கலந்துகொள்ள விரும்புபவர்களும், குருநாதர் அவர்களின் அருளுரைகள் அடங்கிய குறுந்தகடுகள் பெறவும், குருநாதர் அவர்களின் நூல்கள் மற்றும் ஞானத்திருவடி பெறவும் சென்னையில் தொடர்பு கொள்ள:–

திரு. K.S.கைலாசம் – 98400 63510
திரு. D.ரெங்கநாதன் – 96770 17170
திரு. A.பத்மநாபன் – 044 25733917

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஓங்காரக்குடிலில் 20.03.1988 அன்று அருளிய
**அருளுரை**

# புறபூஜையும் அகபூஜையும்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

– திருமந்திரம் – திருவடிப்பேறு – கவி எண் – 1598.

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்,

நம்முடைய சங்கம் பூஜா விதியைப் பற்றி சொல்லுகின்ற சங்கமாகும். எப்படி பூஜை செய்வது? எப்படி பூஜை செய்தால், நம்மை நாமே உயர்த்திக் கொள்ளலாமென்று சொல்வோம்.

இதற்கு முன்பு யோகநெறியைப் பற்றி பேசியிருக்கிறேன். மூச்சுக்காற்றைப் பற்றி மிகத் துல்லியமாக பேசியிருக்கிறேன். இதை கேட்கும்போது புரியும். ஆனால் பிறகு புரியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆக இது அவ்வளவு கடினமான ஒன்று.

வாசியைப் பற்றியும், மூச்சுக்காற்றைப் பற்றியும் சென்ற முறை சுவடி பார்க்கும்போது குரு வணக்கம் பற்றி பேச கட்டளை வந்தது. ஆக அந்த கட்டளைக்கு பிறகு பக்தி நெறியையும், யோக நெறியையும் கலந்து பேசுவது நல்லது என்று கடந்த வாரம் முடிவெடுத்தோம்.

குரு வணக்கம் பற்றி பேசும்போது நம்மை விட மேலானவர்கள்தான் நமக்கு குருவாக இருக்க வேண்டும். அவர்களை உள்ளம் உருக பூஜிக்க வேண்டும்.

பூஜை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று அக பூஜை. மற்றொன்று புற பூஜை.

அக பூஜை என்பது உள்ளும் புறமும் உணர்ந்து செயல்படுவது. புற பூஜை என்பது சாதாரண மக்களும் செய்வது.

சிலபேர் மல்லிகை, ரோஜா, மனோரஞ்சிதம் போன்ற மலர்களை மலையளவு குவித்து, பூஜை செய்வார்கள். மேலும் மலையளவு நறுமணமுள்ள மரிக்கொழுந்தை வைத்தும் பூஜை செய்வார்கள். மரிக்கொழுந்து பூவல்ல. அது செடி. மரிக்கொழுந்து மல்லிகை பூவைவிட நறுமணம் வாய்ந்தது. அதை “புஷ்பராஜ்” என்று சொல்வார்கள்.

மலர்களிலே அரசன் எது என்று கேட்டால், அது மரிக்கொழுந்துதான். மரிக்கொழுந்து பச்சை நிறமாக இருக்கும். ஆனால் அது மலரல்ல.

ஆனால் எல்லா மலர்களிலும் உள்ள நறுமணத்தைவிட மரிக்கொழுந்தில் வாசனை அதிகமாக இருக்கும். ஆக இப்படி பூக்களை குவித்து வைத்து பூஜை செய்தாலும், எந்த பயனும் இல்லை என்கிறார் ஆசான் திருமூலதேவர்.

புனுகு பூனையிலிருந்தும், ஜவ்வாது பூனையிலிருந்தும் வெளியேறுகிற சுக்கிலம் திவ்ய மணமாக இருக்கும்.

மற்ற ஜீவராசிகளின் சுக்கிலம் துர்நாற்றமுடையது. ஆனால் புனுகு பூனை, ஜவ்வாது பூனை இவைகள் இரண்டின் சுக்கிலம் உலகத்திலேயே நறுமணமாக இருக்கும். வேறெந்த ஜீவராசிகளுக்கும் இது போன்று இருப்பதாக தெரியவில்லை. இந்த நறுமணம் வேறெந்த பொருளிலும் இருக்காது.

ஆக புனுகு பூனை வெளியிடுகின்ற சுக்கிலம் கழிவுப்பொருள். அது ஒரு திரவம். ஆனால் புனுகு பூனையினுடைய விந்து இந்த அளவு நறுமணமுள்ளதாக உள்ளது.

இதைப்பற்றி ஆராயும்போதும், இயற்கையைப் பற்றி ஆராயும்போதும் நான் அளவில்லாத மகிழ்ச்சி அடைவேன். அதேபோல் சந்தனக்கட்டை அரைத்து வைத்தும் பூஜை செய்வார்கள்.

ஆக புனுகு, ஜவ்வாது, சந்தனம், நல்ல நறுமணமுள்ள மலர்கள் போன்றவைகளை வைத்து பூஜை செய்தாலும் பயனில்லை என்று மகான் திருமூலர் சொல்வார்.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.

– திருமந்திரம் – கிரியை – கவி எண் 1452.

இது யோகிகளுக்கு மட்டும்தான் புரியும். மற்றவர்களுக்கு பயன்படாது.

வானுறு மாமலர் – மலைபோன்று அளவுக்கு உயர்ந்த நறுமணமுள்ள மலர்களை கொட்டி, இட்டு வணங்கினும் – இட்டு பூஜை செய்தாலும், ஊனினை நீக்கி உணர்பவர்க்கல்லது, இதற்கு பொருள் கூறுவது என்பது மிகச்சிக்கலான ஒன்று. ஊனினை நீக்கி என்பது சிக்கல் நிறைந்த ஒன்று.

ஊனினை நீக்குவதற்கு யோகி என்ன செய்கிறார்? முதலில் நாம் செய்யும் பூஜை போன்றே செய்கிறார். எப்பொழுதெல்லாம் முடியுமோ? தன் மனதிற்கு தோன்றுமோ? அப்போதெல்லாம் பூஜை செய்கிறார். மேலும் கோவில் வழிபாடு செய்வது, தினமும் பூஜை செய்வது, நாமாவளி செய்வது, கண்கள் மூடி தியானம் செய்வது, இது போன்று ஆரம்பத்தில் யோகி இப்படியெல்லாம் செய்வார்.

இப்படி புறபூஜை செய்தால், உண்மைப் பொருளை அறியமுடியுமென்று ஆசான் சொல்வார். மேலும் இந்த புறபூஜையில் மட்டும் நின்று விடாதே என்பார். இந்த பூஜையாலும் இலாபம் உண்டு. ஆனால் இத்துடன் நின்றுவிடக் கூடாது என்பார் ஆசான்.

ஊனினை நீக்கக் கூடியது எது? எதெல்லாம் ஊனினை வளர்க்கக் கூடியது என்பதை அறிய வேண்டும். ஆக நாம் செய்கின்ற பூஜையெல்லாம் மன ஆறுதலைத்தான் கொடுக்கும்.

நமக்கு பல்வேறு துன்பங்கள் இருக்கலாம். பிள்ளைகளுக்கு உடம்பு சரியில்லை. குடும்பத்தில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளெல்லாம் நீங்குவதற்கு ஆசான் அகத்தீசரிடம் கேட்க வேண்டும். எதைக் கேட்டாலும் ஆசான் அருள் செய்வார். ஆனால் நாம் செய்த வினைக்கேற்றார்போல் காலதாமதமாகும்.

ஆனால் நாங்களெல்லாம் ஆசானிடம் கேட்டால் உடனே நடக்கும். காரணம் எங்களுக்கும் ஆசானுக்கும் நெருக்கம் அதிகம். நான் நாற்பது ஆண்டு காலம் ஆசானை பூஜை செய்ததினால் நெருக்கம் அதிகம். ஆசானை கேட்டவுடன் காரியங்களெல்லாம் சித்திக்கும்.

நாம் ஞானிகளிடம் தொடர்பு கொண்டு, ஞானிகள் மூலமாகவே உண்மைப் பொருளை அறிந்து ஊனினை உருக்கக்கூடிய ஒன்றை அறிவோம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்பார் மகான் மாணிக்கவாசகர்.

ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது – நமக்கு காமத்தை உண்டாக்குகின்ற ஊனினை உருக்க வேண்டுமென்பதே இதற்கு பொருள். ஊனினை நீக்க உள்ளம் உருகஉருக பூஜை செய்ய வேண்டும். இதை அகபூஜை என்றும், சூட்சும பூஜையென்றும் சொல்வார்கள்.

இப்படி உள்ளம் உருக பூஜை செய்யும்போது, பல கோடி ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கும். அதற்குபிறகு அவர்களுக்கு உண்மைப் பொருளையும், ஊனை உருக்குவது பற்றியும் ஞானிகள் உணர்த்துவார்கள்.

இடதுபக்கம் போகின்ற சுவாசமெல்லாம் ஊனினை வளர்க்கக்கூடியது. இந்த உண்மையை நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். ஊன் என்பது உடம்பு. இந்த உடம்பை வளர்ப்பதற்காகவும், உடம்பு ஆக்கம் பெறுவதற்காகவும் நன்கு வாழ்வதற்காகவும் பூஜை செய்கிறோம்.

இந்த உடம்பைக் கொண்டே, மரணமில்லா பெருவாழ்வுக்குரிய மார்க்கத்தை அடைவதற்கும் பூஜை செய்ய வேண்டும்.

அடுத்து சொல்லப்போவது இரண்டாவது பூஜையாகிய சூட்சுமபூஜை. யோகி கீழ்நோக்கி போகின்ற காற்றை மேல்நோக்கி செல்லும்படி செய்கிறான். அப்படி

மேலே நோக்கும்போது, நமக்கு தொடர்ந்து பிறவித்துன்பத்தை தரக்கூடிய நச்சுத்தன்மையான இந்த உடம்பை உருக்குகிறது.

தங்கத்தை சுடும்போது அதிலுள்ள மாசு நீங்குவதுபோல, யோகிகள் மூலக்கனலை எழுப்புகிறார்கள். இப்படி எழுந்த மூலக்கனலை கொண்டு நச்சுத்தன்மை, அறியாமை, மூடத்தன்மையை உண்டாக்குகின்ற உடம்பை உருக்குகிறார்கள். இப்படி செய்வதுதான் மேலான பூஜை.

எனவே புற பூஜையோடு நின்றுவிடக் கூடாது. அப்படி புறபூஜையோடு நின்றுவிட்டால், அடுத்து வருகின்ற வாய்ப்பை நீ இழந்துவிடுவாய். இதுதான் அறிவுரை.

எனவே ஊனினை உருக்க வேண்டும். ஊன் என்று சொல்லப்பட்ட உடம்பை, மூலக்கனலை எழுப்பி அந்த உடம்பை உருக்கினால் அன்றி, தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. நீ அருள் பெறலாம். ஆனால் அவன் பாதத்தைப் பற்ற முடியாது. ஆக பூஜை செய்து அருள் பெறலாம்.

ஆனால் ஆசான் பாதத்தைப் பற்றி இரண்டற கலக்க முடியாது. ஆசானும் நாமும், தலைவனும் நாமும், அகத்தீசரும் நாமும், கடவுளும் நாமும் இரண்டற கலப்பது என்பது ஊனினை உருக்கினால் அன்றி முடியாது. இந்த புற உடம்பைக் கொண்டு ஞானிகளை அணுக முடியாது.

நாம் செய்வதெல்லாம் புற பூஜை. மலர்களெல்லாம் இட்டு செய்வது புற பூஜை. அகபூஜை செய்வதற்கு ஆசான் துணை வேண்டும். இப்போது நாம் சூட்சும தேகத்தைப் பற்றி பேசுகிறோம்.

தேனமர் பூங்கழல் – அவனுடைய பாதம் இனிமை பொருந்தியது. பூங்கழல் என்பது மென்மையான பாதம். அவனுடைய பாதம் தேனினும் இனிமையானது. மலரினும் மென்மையானது. ஆனால் சேர ஒட்டாது. காரணம், இந்த உடம்பிலுள்ள நச்சுத்தன்மையை நீக்காமல், சேர முடியாதென்று ஆசான் சொன்னார்.

ஆக இதுபோன்று ஊனினை உருக்குவதற்கு உடம்பிலுள்ள நச்சுத்தன்மையை நீக்கினாலன்றி ஒருவருக்கு உள்ளுடம்பு மிகாது. புறஉடம்பாகிய மாசு நீங்காமல் உள்ளெழும் ஜோதி தோன்றாது.

ஜோதி தோன்றுவதற்கு என்ன செய்தார்கள்?

களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி என்றார். தங்கத்தில் இருக்கும் மாசு நீங்க, நெருப்பால் சுடுவது போல, உடல் மாசு நீங்குவதற்கு மூலக்கனலை எழுப்ப வேண்டுமென்று சொல்வார்கள்.

உடம்பில் களிம்பு என்பது உடம்பில் இருக்கும் மாசு. பாத்திரத்தில் இருக்கும் மாசை (அழுக்கை) புளி போட்டு துலக்குவது போலவும், தங்கத்தில் உள்ள மாசை, புடம் போட்டு எடுப்பது போலவும், ஞானிகள் தங்களுடைய தவ முயற்சியால், தங்கள் உடம்பில் இருக்கும் மாசு என்ற குற்றத்தை நீக்குகிறார்கள்.

அவர்கள் மும்மலம் அற்றவர்கள், உடம்பில் களிம்பற்றவர்கள். களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி என்றார். அவர் உடம்பில் இருக்கும் களிம்பை யார் துணைக் கொண்டு நீக்கிவிட்டார்? எல்லாம்வல்ல ஆசான் அகத்தீசரின் துணைகொண்டு நீக்கிவிட்டார்.

மகான் அகத்தீசருக்கு ஆசான் யார்? ஞானபண்டிதன் சுப்ரமணியர்தான் ஆசான்.

ஆசான் அகத்தீசருக்கும், எல்லா தலைவர்களுக்கும், ஞானிகளுக்கும் மகான் சுப்ரமணியர்தான் ஆசான்.

ஆசான் சுப்ரமணியர் மும்மலமற்றவர், களிம்பற்றவர். ஆசான் சுப்ரமணியரின் பாதத்தை உள்ளம்உருக பூஜித்ததன் காரணமாக, ஆசான் அகத்தீசருக்கு உடம்பில் இருந்த களிம்பு நீங்கியது. களிம்பு என்றால் மாசு, அழுக்கு.

நம்முடைய மெய்யுணர்வை தட்டி எழுப்புவதற்கு தடையாய் இருப்பது இந்த களிம்பு. அதை அறுத்தான் என்பார்.

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.

– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 114.

நாம் தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும். பூஜையென்பது ஓரிரு நாட்கள் மட்டும் செய்வதல்ல. தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும். மனஉளைச்சல் இருக்கும்போது யாராலும் பூஜை செய்ய முடியாது.

வறுமையும், பிணியும், பகையும், பூசலும் இவைகளெல்லாம் ஒருவனை தாக்கும்போது அவன் எப்படி பூஜை செய்வான்?

எனவே இப்படி ஒரு நிலைமை வருவதற்கு முன்னே பூஜை செய்ய வேண்டும். ஆக அமைதி இருக்கும்போதே ஞானிகளை பூஜை செய்துகொள்ள வேண்டும்.

ஞானிகளை பூஜை செய்வது தொடர் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். இப்படி தொடர்ந்து பூஜை செய்வதால் நமக்கு என்ன விளைவுகள் ஏற்படும். முதலில் பொல்லாத வறுமை தீரும். மனசாந்தம் உண்டாகும்.

ஒருவனுடைய மனது சாந்தமில்லாமல் இருப்பதே, மற்றவரை அணுஅணுவாக சித்ரவதை செய்வதற்கு காரணமாகும்.

ஏதோ ஒரு வகையில் மனதில் சாந்தமிருக்காது. ஒன்று, சென்ற காலத்தைப்பற்றி, இல்லையென்றால் நிகழ்காலத்தைப் பற்றி அல்லது வருங்காலத்தைப் பற்றி, ஆக இந்த மூன்று வகையால்தான் மனதில் குறையிருக்கும்.

யோகிகள் நடப்பது நடக்கட்டும் என்றிருப்பார்கள். மனத்தெளிவுள்ள மக்கள், நடப்பது நடக்கட்டும். நாம் இதைக் கண்டு சோர்வடைந்தாலோ அல்லது பயந்தாலோ விடாது. நடப்பது நடக்கட்டும் என்ற எண்ணம் வந்தால், அவன் விஷயம் தெரிந்தவன் என்று அர்த்தம். அவனே சாந்தமுள்ளவனாக இருப்பான்.

ஆசான் ஆசி பெற்றவர்கள் வருங்காலத்தைப்பற்றியும், சென்ற காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் நிகழ்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். நடப்பது நடக்கட்டும் எப்படியும் ஆசான் அகத்தீசர் என்னைக் காப்பாற்றுவார், நிச்சயம் அவருடைய ஆசி எனக்கு உண்டு என்னும் திடமான அறிவு இருக்குமேயானால் அவன் எதற்கும் பயப்படமாட்டான்.

ஆனால் ஞானிகளின் ஆசி பெறாதவன், வருங்காலம் இப்படியாகுமோ, அப்படியாகுமோ என்ற கற்பனையில் உழன்று கிடப்பான்.

களிம்பறுத்தான் அருட்கண் விழிப்பித்து – நமக்கு உள்ளேயே இந்த தெளிவை தருகிறார்கள். அவனின்றி ஓர் அணுவும் அசையாதென்று எண்ணக்கூடிய எண்ணத்தை தருவார்கள்.

ஞானிகளெல்லாம் அசைவற்று இருப்பார்கள். அது மேலான நிலை. நாமே இந்த காரியத்தை நடத்துகிறோம். நம்மால்தான் இந்த காரியம் முடிந்ததென்று நினைத்து பல நல்ல காரியம் செய்யும்போது மனதிற்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

அதே சமயத்தில் தீமையான காரியம் நடக்கும்போது சோர்வு வரும். எனவே நான் செய்கின்ற காரியத்தில் எனக்கு ஏற்பட்ட துன்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் ஆசானாகிய நீங்களே காரணம், உங்களால்தான் இதை மாற்ற முடியும், உங்களால்தான் இதை நடத்தி வைக்க முடியுமென்று நினைக்கின்ற மக்கள் மன அமைதியை பெறுகிறார்கள்.

ஆக எல்லாவற்றிற்கும் ஆசான் அகத்தீசரை பூஜிக்க வேண்டும். இதற்கு ஊனினை உருக்க வேண்டிய அவசியமில்லை. பிறவித்துன்பத்தை ஒழிப்பதற்குதான் ஊனினை ஒழிக்க வேண்டும்.

ஊன் என்பது புற உடம்பு. நமக்கு இரண்டு உடம்பு உண்டு.

மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணாவபோல்
எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே.

– திருமந்திரம் – யாக்கைநிலையாமை – கவிஎண் 143.

இந்த பாடலின் சூட்சுமத்தை ஆசான் திருமூலதேவர் ஆசி பெற்றால் அறிந்துகொள்ளலாம்.

மண்ணொன்று கண்டீர் – புற உடம்பு.

இருவினை பாத்திரம் – புற உடம்பு, அக உடம்பு.

ஆக அக உடம்பு கண்களுக்கு புலப்படாது. இது சூட்சும தேகம்.

புற உடம்பு என்பது கண்களுக்கு புலப்படக்கூடிய ஒன்று, அது காமத்தை உண்டாக்கக்கூடியது, நரை, திரை, மூப்பு, இறப்பை உண்டாக்குவதற்கு காரணமாக இருக்கும், இந்த உடம்பு அநித்தியமானது.

அகஉடம்பு யௌவன பருவமாக என்றும் இருக்கும். அது கண்களுக்கு புலப்படாது, என்றும் ஒரே தன்மையாக இருக்கும்.

களிம்பறுத்தான் அருட்கண் விழிப்பித்து – அவன் களிம்பறுத்தவன். உடல் மாசை நீக்கியவன். உடல் மாசு நீங்கினாலன்றி மனமாசு நீங்காது. மனமாசு நீங்கினாலன்றி உண்மைப் பொருள் தெரியாது. உண்மைப் பொருள் தெரியாவிட்டால், நிச்சயமாக வாசி நெறியைப் பற்றியும், ஆறாதார நிலையைப் பற்றியும் தெரியாது.

மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது

இவனுக்கு எப்போது தீவினை சேர்ந்தது. பிறவித் துன்பத்தைப் பற்றி அறிந்து, ஆராய்ந்து நீக்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் மனிதனுக்குத்தான் உண்டு. மற்ற ஜீவராசிகள் இதைப்பற்றி சிந்திக்கவே முடியாது. மற்ற ஜீவராசிகளுக்கு இந்த தகுதியே கிடையாது.

மனிதனுக்கு மட்டும்தான் என்பதை, மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம் என்றார். மண் ஒன்றுதான். மண்ணை பிடிப்பான், தனி மண்ணை உருண்டை செய்ய முடியாது. அதற்கு நீர் கலக்க வேண்டும்.

நாதவிந்து சேர்க்க வேண்டும். அப்பொழுது ஆண் – மண், பெண் – நீர். ஆக இந்த இரண்டும் சேர்ந்துதான் உயிர் உருவாகும்.

ஆக ஒரே மண்தான். இரண்டு வகை பாத்திரம் மண்ணால் செய்யப்படுகிறது என்றார்.

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே.

– திருமந்திரம் – யாக்கை நிலையாமை – கவிஎண் 144.

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால் – இந்த உடம்பை கூரை வீடென்றும், மண் பாண்டம் என்றும் சொல்லியிருக்கிறார்.

என்னதான் சிறப்பாக வைக்கோல் அல்லது தட்டை கொண்டு வேய்ந்தாலும் அந்தக் கூரை பத்து பதினைந்து ஆண்டுகள்தான் இருக்கும். பிறகு மக்கிப்போகும். ஆக இந்த உடம்பை கூரை வீடு என்று சுட்டிக்காட்டியதன் நோக்கம், நாளுக்குநாள் இந்த உடம்பு வளர்ச்சியை காட்டாது. ஆனால் நாளுக்குநாள் இந்த உடம்பு மக்கிப்போகும்.

இங்கே மண்ணென்று சொல்லும்போது மீண்டும் மண்ணாவதற்கு முன்னே நீ முயற்சிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆக திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது, இந்த உடம்பை உறுதியென்று எண்ணியதால் தீவினை சேர்ந்தது. இந்த புறஉடம்பு அநித்தியமானது. நிச்சயம் அழியக்கூடியது. நமக்கு பிறவித்துன்பம் உண்டு, எமபயம் உண்டு. எமன் நம்மைக் கொன்று விடுவானென்று நினைக்காமல், இந்த உடம்பு கடைசி வரைக்கும் உதவி செய்யுமென்று நினைத்து உங்களை நீங்கள் ஏமாற்றிக் கொண்டீர்கள். அதனால்தான் உங்களுக்கு தீமை வந்ததென்றார்.

ஞானிகள் இந்த உடம்பை முழுமையாக நம்பவில்லை. அதை இறுகப்பற்றவில்லை. இந்த உடம்பின் மேல் மயக்கமில்லை. இந்த உடம்பு அழியக்கூடிய அநித்தியமான உடம்பு. எப்படியாவது அதை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைப்பார்கள். ஞானிகளின் தயவை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைப்பார்கள்.

ஆசான் திருமூலதேவர், மகான் நந்தீசர், மகான் அகத்தீசர் இவர்களின் பாதத்தைப் பற்றி எப்படியாவது இந்த புறஉடம்பை காப்பாற்றி அகஉடம்பாகிய சூட்சும உடம்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். மரணமிலா பெருவாழ்வுக்குரிய மார்க்கத்தைப் பெற வேண்டுமென்று விடாமல் சிந்தித்தார்கள், சித்தி பெற்றார்கள்.

நாமென்ன செய்கிறோம். இந்த புறஉடம்பே பூரணமான பாதுகாப்பு தருமென்று நம்பி, ஏமாந்த காரணத்தாலே இந்த உடம்பு வீழ்ந்து போனது.

விண்ணின்று நீர் வீழின் மீண்டும் மண்ணானாற்போல – அது முன்னமே மண்ணாக இருந்தது. இந்த புற உடம்பு தண்ணீரும் மண்ணும் சேர்ந்த ஒரு பாத்திரம். நாதவிந்து சேர்ந்த ஒரு பாண்டம். ஆண் பெண் கூடி, அதனால் உண்டான பாத்திரம்.

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம்விட்டே என்கண்ணம்மா உன்பாதஞ் சேரேனோ.

– மகான் அழுகண்ணிச்சித்தர் – கவி எண் 8.

மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால் – ஆக மாற்றிப் பிறக்க மருந்து கிட்டும். அது இந்த உடம்பில் இருக்கிறதென்பதை கண்டறிந்தவர்கள்தான்

ஞானிகளும் மகான்களும் ஆவார்கள். எனவே இந்த உடம்பு மீண்டும் மண்ணாவதற்கு முன்பே அவர்கள் முயற்சி செய்தார்கள். அந்த காரணத்திற்காகவே,

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்

என்றார். அருட்கண் விழிக்க வேண்டுமென்றால், நமது பார்வையில் அருள் இருக்கவேண்டும். ஒருவனை உருட்டிப் பார்த்தல், கடுமையாக பார்த்தல் இவையெல்லாம் அருட்பார்வையல்ல. அது மருட்பார்வை.

சாந்தமாக பார்க்க வேண்டும். இனிமையாக பேச வேண்டும். நாம் ஞானிகள் மீது எந்த அளவிற்கு அன்பு கொண்டு மனம் உருகுகின்றோமோ, அந்த அளவிற்கு ஞானிகளுக்கு நம்மீது கனிவு வரும், அன்பு வரும். இதை அருட்கண் விழித்து என்று சொல்லாமல், விழிப்பித்து என்று சொன்னார். அளவு கடந்து அன்பு செலுத்துவதை ஒருவனுடைய பார்வையாலேயே தெரிந்து கொள்ளலாம். கண்களிலிருந்து அருள் உண்டாகும். இதை ஆசான் திருவள்ளுவர்,

பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

– திருக்குறள் – குறிப்பு அறிதல் – குறள் எண் 709.

ஒருவனைப் பார்க்கும்போதே அவனுடைய கண்களிலிருந்து அவன் நம்மேல் வெறுப்போடு இருக்கிறானா அல்லது நட்போடு இருக்கிறானா என்று தெரிந்து கொள்ளலாம். எனவே அருட்கண் விழிப்பித்து என்று சொல்லும்போது, நம்மீது அளவில்லாத அன்பு இருக்குமானால் ஞானிகளுடைய பார்வையில் கருணை இருக்கும்.

நாம் ஞானிகளின் மீது அன்பு கொண்டு உள்ளம் உருகினால், அவர்களுடைய உள்ளம் நம்பால் உருகும். உள்ளம் உருகினால், அவர்களுடைய பார்வையில் அருள் இருக்கும். அந்த அருள் புற உடம்பின் மாசை நீக்க பயன்படும்.

விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணாவபோல்
எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே.

எண்ணிலடங்கா மனிதர்கள் இந்த உடம்பை உறுதிப்படுத்திக் கொள்ளாததால் இறந்து விட்டார்கள். ஞானியர்கள் இந்த உடம்பை அநித்தியமானது, அழியக்கூடியதென்பதை அறிந்து கொண்டார்கள். தங்களது தவ முயற்சியாலும், தலைவனை உள்ளம் உருக பூஜித்த காரணத்தாலும் அழியக்கூடிய உடம்பை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். மரணமில்லா பெருவாழ்வுக்குரிய மார்க்கத்தை அறிந்து கொண்டார்கள்.

நாம் மரணமில்லா பெருவாழ்வு பெறுவதற்கு சில விளக்கத்தை தந்து கொண்டிருக்கிறோம். நாம் அந்த நிலையை அடைந்திருக்கிறோம். அந்த வாய்ப்பு

எங்களுக்கு உண்டு. நாம் புறஉடம்பைக் கொண்டு அகஉடம்பை பாதுகாத்துக் கொள்கிறோம்.

எங்களை அணுஅணுவாக வஞ்சிக்கக் கூடிய காமத்தை, அறியாமையை, மூடத்தனத்தை உண்டாக்கக்கூடிய அறிவை உடைத்தெறிந்தோம். மேலும் அதே அறிவை நாளுக்குநாள் பயன்படுத்தி அரும்பாடுபட்டு உடம்பில் இருக்கும் மாசை நீக்கிக் கொண்டோம்.

புற உடம்பின் துணைகொண்டு அகஉடம்பை வளர்த்தோம். இன்னும் அக உடம்பை வளர்த்தோம், வளர்த்துக் கொண்டே இருக்கிறோம். வெற்றி பெறுவதற்காக தினம் பூஜை செய்து வருகிறோம். ஆக மீண்டும் மண்ணாகாமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த ஆற்றல் உண்டு.

புற உடம்பைக் கொண்டே, அக உடம்பை பாதுகாத்துக் கொள்கின்ற வாய்ப்பு உண்டு. தவமுயற்சியால் ஊனை உருக்க முடியும். அதற்கு உள்ளம் உருக பூஜிக்க வேண்டும். அப்படி உள்ளம் உருக பூஜித்தால் என்னாகும் என்பதை மகான் திருமூலர்,

மருவிப் பிரிவறி யாளங்கள் மாநந்தி
உருவ நினைக்கநின் றுள்ளே யுருக்குங்
கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கிங்
கருவினை கண்சோரும் அழிவார் அகத்தே.

– திருமந்திரம் – ஞானகுரு தரிசனம் – கவி எண் 2665.

ஞானிகளை உள்ளம் உருக பூசிக்க பூசிக்க நம்மோடு இரண்டற கலந்து விடுவார்கள்.

மருவிப் பிரிவறி யாளங்கள் மாநந்தி – நம்மோடு கலந்து விட்டால் நிச்சயம் பிரிய மாட்டார்கள். ஆனால் கலக்க மாட்டார்கள். கலந்தால் நிச்சயம் நம்மை விட்டு பிரிய மாட்டார்கள். இப்படி கலப்பதற்கு நம்மீது எந்த அளவு கருணைக் காட்ட வேண்டும். இது மிகப்பெரிய கருணை.

இவையெல்லாம் ஒன்றும் கற்பனையல்ல. இராமாயணம், மகாபாரதம் போன்ற கற்பனைக் கதையுமல்ல. ஞானிகள் அத்தனைபேரும் தம்முடைய தவத்தால் ஏற்பட்ட அனுபவத்தை சொல்வார்கள்.

உருவ நினைக்கநின் றுள்ளே யுருக்குங் – உருகி நினைத்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை மகான் திருமூலர் கூறும் மற்றொரு கவியான **களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி** என்ற கவியில் பார்ப்போம்.

களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி – ஒருவனுக்கு புருவமத்தியில் தோன்றக்கூடிய ஜோதிதான் அவனுடைய களிம்பை அறுக்கக்கூடியது. இதை

களிம்பணுகாத கதிரொளி காட்டி என்பார். கதிரொளி என்பது சூரிய ஒளி, புருவமத்தியில் ஜோதி தோன்றும்.

ஆக களிம்பணுகாத கதிரொளி காட்டுவது யார்? எங்கேயோ இமயமலையில் இருக்கும் ஈசன் அல்ல. அவன் நம்முள் இருந்தே எழுகிறான். ஞானிகள் அவனை உள்ளம் உருக பூஜித்து இரண்டற கலந்து விடுகிறார்கள். இரண்டற கலந்து அவர்கள் காணுகின்ற அருட்பெருஞ்ஜோதியை புருவமத்தியில் தட்டி எழுப்புவார்கள். இதை மகான் திருமூலர்,

உற்றுநின் றாரோடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே.

– திருமந்திரம் – அன்பு செய்வாரை அறிவன் சிவன் – கவி எண் 284.

**உற்றுநின்றாரோடு மத்தகு சோதியை – ஒருவனுக்கு ஜோதி தோன்றினால் அது இன்னொரு மகானின் அருட்கருணையினால்தான் முடியும். அவன் அந்த அளவுக்கு உள்ளம் உருக பூஜித்ததால் ஞானிகள் அவனுடன் இரண்டற கலந்து விடுவார்கள். அப்படி உள்ளம் உருக பூஜித்ததால் அவர்கள் கோடி சூரிய பிரகாசமாக புருவமத்தியில் தோன்றுவார்கள். இது எங்கள் அனுபவம், கற்பனையல்ல.**

உற்று நின்றாரோடு மத்தகு சோதியை – இந்த ஜோதியை உண்டாக்கக் கூடியவர்கள் ஞானிகள்தான். அவருக்கு ஜோதியை உண்டாக்கியது அவருடைய ஆசான். அந்த ஆசானுக்கு ஜோதியை உண்டாக்கியது அவருடைய ஆசான்.

ஆக ஒருவர் ஜோதி காண்கிறார் என்றால், அது அவர்களுடைய ஆசானின் தயவுதான். சித்தர்களின் பாரம்பரியமே இப்படித்தான் இருக்கிறது.

உற்றுநின் றாரோடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை

இந்த ஜோதி தோன்றுவதற்கு சித்தர்கள்தான் காரணம். சித்தர்கள் மட்டும்தான் இந்த ஜோதியை காட்டமுடியும். அந்த ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டு. இந்த உண்மைகளையெல்லாம் உலகத்தார் அறிந்து கொள்ள வேண்டும்.

பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே.

பக்திமையாலே உள்ளம் உருக பூஜித்தாலன்றி ஜோதியை காட்ட மாட்டார்கள். ஜோதியை காட்டினால் புறஉடம்பு வீழ்ந்து அகஉடம்பு தோன்றும் என்றார். உள்ளெழும் ஜோதியை தட்டி எழுப்பாவிட்டால், புறஉடம்பின் மாசு நீங்காது.

இந்த உண்மையை புரிந்து கொள்வதற்கு ஒரு கதை சொல்வார்கள். ஆசான் தட்சணாமூர்த்தி தவம் செய்து கொண்டிருந்தார். அவரை யாரும் நெருங்க முடியாது. மன்மதன் அவரைப் பார்க்கப் போகிறேனென்று மகான் நந்தீசரிடம் சொன்னான். மகான் நந்தீசர் நீ போகாதே, அப்படி நீ போனால் நிச்சயமாக உன்னை எரித்து விடுவார் என்றாராம். மன்மதன், ஆசான் நந்தீசர் கட்டளையை மீறி உள்ளே சென்று, ஆசான் தட்சணாமூர்த்தி மீது மன்மதன் பாணத்தை தொடுத்தான். அவர் கண்ணை விழித்தார். அப்படி கண் விழிக்கும்போதே மன்மதன் எரிந்துவிட்டான்.

ஆக இந்த கதையில் ஒரு உண்மை உள்ளது. நெற்றிக் கண்ணை சுழிமுனைக்கதவை திறந்தால் காமம் அற்றுப்போகும். மன்மதன் எரிந்துவிட்டான் என்பார்கள். இதை காமதகனம் என்றும் சொல்வார்கள்.

ஆக நெற்றிக்கண்ணாகிய சுழிமுனைக்கதவை திறந்தால், காமவிகாரம் அற்றுப்போகும். சுழிமுனைக் கதவு திறக்காத வரையிலும், காமம் மனிதனை வஞ்சிக்கத்தான் செய்யும். காமம் மனிதனை வஞ்சிக்கிறது என்பதற்காக அதைப்பற்றி சிந்திக்க தேவையில்லை. ஆனால் நாம் செய்ய வேண்டிய காரியத்தை நிச்சயமாக செய்ய வேண்டுமென்று பல்வேறு வகையாக சொல்வார்கள்.

*மருவிப் பிரிவறி யாளங்கள் மாநந்தி, உருவ நினைக்கநின் றுள்ளே யுருக்கும்* என்றும் *கருவில் கலந்து உள்ளம் காண வல்லார்க்கு* என்றும் சொல்வார்கள். கருவில் என்றால் நம்மோடு கலந்ததென்று அர்த்தம்.

கருவினை கண்சோரும் அழிவார் அகத்தே – வினை இப்படித்தான் வரும். பிறர் துன்பத்தை அறியவே முடியாது. தாய்தந்தை இவனை கண்ணும்கருத்துமாக வளர்த்திருப்பார்கள். அந்திமகாலத்தில் அவர்களுக்கு முதுமை வந்தபோது, அந்த நன்றி உணர்வோடு அவர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும். ஆனால் வெகு மனிதர்கள் பாதுகாப்பு தராமல் பாவத்தை செய்கிறார்கள்.

ஒரு அன்பரை பார்த்தேன். மார்கழி தை மாதம், அப்போது பெய்யும் பனி மிகவும் கொடுமையானது. இவன் வீட்டின் முன்னே தாழ்வாரம் உள்ளது. அதன் மீது கீற்று கிடையாது. வெறும் மூங்கில்மட்டும்தான் இருக்கிறது. அவன் தன்னுடைய தாயை திண்ணையில் போட்டிருக்கிறான். அவனும், அவன் மனைவியும் வீட்டினுள்ளே திடமான போர்வையை போர்த்தி தூங்குகிறார்கள். அவனைப் பெற்றெடுத்தவள் திண்ணையிலே குளிரில் உதறிக் கொண்டு, அம்மா! அம்மா! குளிருதம்மா என்கிறாள். அந்த பெண் அப்படியே கிட சாகிற மட்டும் என்கிறாள். இதை நான் கண்டேன்.

ஆக ஒரு அறுபத்தைந்து வயது கிழவி. தாழ்வாரத்திலே போர்வை போர்த்திக் கொள்ளக்கூட இல்லாமல் குளிரில் நடுங்குகிறாளே! அவளுக்கு ஒரு போர்வை கொடுக்க வேண்டுமென்று நினைக்காத அறிவுதான் ஒருவனை கொடிய

பாவியாக்கும். அப்படிப்பட்டவர்களெல்லாம் காட்டுமிராண்டிக்கோ, காண்டாமிருகத்திற்கோ பிறந்திருக்க வேண்டும். காண்டாமிருகத்திலிருந்து பிறந்தவர்களுக்குத்தான் இவ்வளவு ஒரு கொடிய மனமிருக்கும். இப்படிப்பட்டவர்கள் ஞானியர்கள் பாதத்தைப் பற்ற முடியாது.

தன்னை, கண்ணை இமை காப்பது போல் கண்ணும் கருத்துமாக பாதுகாத்த தாய்தந்தையர்களை, முதுமை வந்ததும் வெளியே தள்ளிவிட்டு உள்ளே படுத்து தூங்கும் இந்த கயவர்களுக்கு ஞானம் உண்டா? என்று விஷயம் தெரிந்தவர்கள் கேட்பார்கள்.

இவர்களுக்கும் ஞானியர்கள் அருள் செய்வார்கள் என்று சொல்வது என்ன நியாயம்? ஆக இவ்வளவு கொடிய மனம் உள்ள பாவிகளாக இருந்தாலும், அவர்களும் உள்ளம் உருகினால் உணரப்படுமென்றார்.

தினம் பூஜித்தால் உன்னுடைய கடின மனம்பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

கருவினை கண்சோரும் அழிவார் அகத்தே – ஆக இப்படி ஒவ்வொரு ஜென்மங்களிலும் உணர முடியாத ஒரு கடின மனம் இருக்கும். எனவே பாவத்திற்கு என்ன காரணம்?

மனைவி தன்னையே நம்பி வந்திருப்பாள். உன்னையே சதமாக நினைத்திருப்பாள். ஆனால் அவன் சந்தேகத்தின் பெயரிலோ அல்லது இவன் விரும்புகின்ற அந்த கட்டு தேகம் குலைந்தபின் நித்தம் நித்தம் கொடுமை செய்வான். சந்தேகத்தின் பேரிலும் பல்வேறு காரணங்களாலும் அவளை சித்ரவதை செய்வான். சொல்லினாலேயே சித்ரவதை செய்வான். அவள் வெளியே தெரியாமல் நொந்து சாவாள். அப்பேர்ப்பட்ட மூடத்தனமும் கடிய நெஞ்சும் உள்ள பாவிகளும் ஞானிகளின் பாதத்தைப் பற்றுவார்கள்.

ஒருவன் பாவம் செய்வதற்கு எந்த ஊருக்கும் போக வேண்டியதில்லை. பாவம் செய்கிற இடமே நமது வீடுதான். நமது மனைவி, பிள்ளைகள், தாய் தந்தை, நண்பர்கள், உடன் பிறந்தோர்கள் இவர்களிடம்தான் நாம் பாவம் செய்வோம். ஞானிகளெல்லாம் இதை உணர்ந்தவர்கள். தீவினை எப்படி நம்மை ஆள்கிறது? அது எப்படியெல்லாம் நம்மை வஞ்சிக்கிறது. எந்தெந்த வினைகள் மூலம் நமக்கு பாவம் சேர்கிறதென்பதையெல்லாம் ஞானிகள் அறிவார்கள்.

அங்கே தாய் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறாள். அவன் கண்டுகொள்ளாமல் சுகமாக தூங்குகிறான். ஆனால் ஞானிகளெல்லாம் தாய்மை உணர்வு மிக்கவர்கள்.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

– மகான் பட்டினத்தார் – தாயாருக்கு தகனக் கிரியை செய்கையிற் பாடியது – கவி எண் 6.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனவழைத்த வாய்க்கு.

– மகான் பட்டினத்தார் – தாயாருக்கு தகனக் கிரியை செய்கையிற் பாடியது – கவி எண் 5.

அரிசியோ நானிடுவேன் என்று சொன்னார். அதுதானே தாய்மை உணர்வு. அப்படி உள்ளவன்தானே ஞானியாக முடியும். அந்த உணர்வல்லவோ ஞானியாக்கும்.

எண்பது வயது கிழவி, திண்ணையிலிருந்து “அப்பா மகனே சிங்காரம்” என்று நடு இரவில் மகனை அழைக்கிறாள். “உனக்கு வேலையில்லையா தூங்கு” என்கிறான் மகன். இவன் மனிதனா?

அரிசியோ நானிடுவேன் என்கிறார் மகான் பட்டினத்தார். என் தாய்க்கா அரிசி இடுவேன் என்றார். ஆக அவன் மனிதனா? இவர் மனிதனா?

மனிதனுக்கு வினை எப்படி சேர்கிறது? நல்வினை மிகுவதற்கு காரணம் அந்த மென்மையான அறிவு. தீவினை மிகுவதற்கு காரணம் அந்த கடிய மனது. இந்த கடிய மனது திருந்துவதற்காகத்தான் நாம் பூஜை செய்கிறோம். இந்த கருத்தை எதற்கு சொல்கிறோம் என்றால், உன்னிடம் இந்த கடிய மனம் எதையும் உணர முடியாத கரும்பாறை மனம், மூர்க்க மனம் இருக்க கூடாது என்பதற்காகத்தான் தவிர வேறொன்றுமில்லை.

“அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு, வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்” என்று சொல்வார் மகான் பட்டினத்தார்.

இறுதி காலத்தில் தாய்க்கு வாய்க்கரிசி போடுவதுண்டு. எதையெல்லாம் கேட்கிறானோ? அதையெல்லாம் கொடுப்பாள். தனக்கென எதுவும் வைத்து மகிழ மாட்டாள். அப்படிப்பட்ட தாய்க்கா நான் கடைசி நேரத்தில் அரிசியா போடுவேன் என்பார்.

“உருசியுள்ள தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ மானே எனவழைத்த வாய்க்கு அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற் கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்” இதை நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன்.

ஆக மனிதவர்க்கத்திடம் தாய்காட்டிய அன்பை உணரமுடியாத, பிறர் துன்பத்தை அறிய முடியாத கடிய மனம் இருக்கிறது. அதை மாற்றுவதற்காகத்தான் பேசியிருக்கிறேன்.

யோகத்தைப் பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம். யோகம் நொடிப்பொழுதில் காட்டக்கூடியது. இதை மகான் திருமூலர்,

உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே.

– திருமந்திரம் – சம்பிரதாயம் – கவி எண் 1778.

எனவே யோகத்தைப் பற்றி பிறகு பார்க்கலாம். மனித வர்க்கத்தை மாசுபடுத்தக் கூடிய, இந்த கடின மனத்தை மாற்றுவதற்காகத்தான் பேசுகின்றோம்.

**மற்றவர்களுடைய துன்பத்தை உணர்கின்ற பரிபக்குவம் ஒருவனுக்கு வருமேயானால் அவனே கடவுள்.**

அப்படி பிறர் துன்பத்தை உணர முடியாத நிலை வந்தால், அவன் மனிதன். பிறருடைய துன்பத்தைக் கண்டும் சிந்திக்க முடியாதவன்தான் மிருகம்.

நாம் சில பூஜா விதிகளைப் பற்றி வருகின்ற சித்ரா பௌர்ணமி அன்று சொல்லப்போகிறோம்.

திருவிளக்கில் தீபத்தை ஏற்றி வைத்து, அதன் முன் தட்டு, ஒரு டம்ளர் தண்ணீர் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, உள்ளங்கையில் தண்ணீர் விட்டு அந்த நீரை தட்டில் ஊற்றும்போது “அகத்தீஸ்வரா என் உடல், பொருள், ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம். என்னுள் இருந்து எது எது குற்றமோ அதை உணர்த்து. அடியேன் உணர்ந்தால் மட்டும் போதாது, அதை நீக்குவதற்கும் அருள் செய்ய வேண்டும்” என்று கேட்க வேண்டும்.

ஆக இதைப்பற்றியெல்லாம் மக்களுக்கு சொல்ல வேண்டுமென்று மகான் அகத்தீசர் சொல்லியிருக்கிறார்.

**01.05.1988** அன்று பூஜாவிதியைப் பற்றி அறிவிக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்றும் ஆசான் அகத்தீசர் சொன்னார்.

ஆட்டை வெட்டுவான், ஆட்டுக் குட்டியை கடிப்பான். வெட்டுவது, கடிப்பது, குத்துவது பூஜா விதியாக இருந்தது. நான் ஒரு சிற்றூரில் தங்கியிருந்தேன். அகண்ட காவிரி பகுதியில் பச்சை பந்தல் போட்டிருந்தான். அங்கு பூஜை நடக்கிறது. பூசாரி கட்டிப் போட்ட கிடா பன்றியை ஒரு ஈட்டியால் குத்துகிறான். ஒவ்வொரு குத்துக்கும் ஒவ்வொரு முழம் சென்று வருகிறது. பன்றி கொடுமையான வேதனை தாங்காமல் சத்தமிடுகிறது.

அங்கே இருப்பவர்களுக்கு அந்த கொடிய சத்தத்தைக் கேட்டு அவர்களின் உள்ளத்தில் இரக்கம் வரவில்லை.

இன்னும் சிலபேர் ஆட்டுக்குட்டியை கடிப்பார்கள். இதை குட்டி கடிப்பது

என்பார்கள். ஆக அவன் குத்துகிறான். இவன் கடிக்கிறான். இவர்களெல்லாம் ஞானம் என்றால், வீசை (கிலோ) என்ன விலை என்று கேட்பார்கள். ஆக இவையெல்லாம் சமுதாயத்தில் நடக்கின்ற பூஜைகள். இவனை இந்த பூஜையே நரகத்திற்கு தள்ளிவிடும். இந்த பூஜையை நீக்கி, நாம் ஒரு புதுமையான பூஜாவிதியை சொல்லப் போகிறோம்.

முன்பெல்லாம் மாவிளக்கு போடுவார்கள். பால் அபிஷேகம், தேன் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் செய்வார்கள். அவரவர்கள் தரத்திற்கு ஏற்றாற்போல பூஜைகள் செய்கிறார்கள். இது ஒரு வகையான பூஜை. ஆனால் நாம் காட்டுகின்ற பூஜை புதுமையாக இருக்கும்.

என் உடல், பொருள், ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம் என்று சொல்கிறோம். எது எது குற்றமோ, அதை உணர அருள் செய்ய வேண்டுகிறோம். உணர்ந்தால் மட்டும் போதாது. அதை நீக்கவும் அருள் செய்ய வேண்டுமென கேட்கிறோம்.

அது மட்டுமல்ல. என் அகமும் புறமும் இருந்து நான் உண்மை பொருளை உணரவும், அதை பின்பற்றவும், அடியேன் வாசியோடு வாசியாக கலந்து வாசிநிலை அறிய வேண்டுமென்றும் கேட்க வேண்டும். இப்படியெல்லாம் கேட்க வேண்டுமென்ற பூஜா விதியை நாங்கள் வைத்துள்ளோம்.

அதே சமயத்தில் நமக்கு புறதேகம், அகதேகம் என்ற இரண்டு வகையான உடம்பு உண்டு.

புறதேகம் – தூலதேகம், அகதேகம் – சூட்சுமதேகம்.

சூட்சும தேகத்தை நான் அறிய வேண்டும். சூட்சுமத்தை நான் அறிய விரும்புகிறேன் என்று சொன்னாலே நிச்சயமாக நாம் தூலத்தை அறியலாம். புற உடம்பைப் பற்றி அறியக்கூடிய ஆற்றல் கிடைக்கும்.

ஆக இப்படிப்பட்ட பூஜை நெறியை சொல்லப் போகிறோம். மகான் திருமூலதேவர் இந்தக் கருத்தை,

உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே.

– திருமந்திரம் – சம்பிரதாயம் – கவி எண் 1778.

உதகம் என்றால் தண்ணீர். நாம் சொல்லுகின்ற இந்த கருத்தை மகான் திருமூலதேவர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார். அப்படி சொன்ன பூஜை முறை, இன்று புதுமையாக தெரிகிறது என்றால், இந்த காலக்கட்டம் எவ்வளவு கடுமையாக இருக்கிறது.

ஆக மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மகான் திருமூலர் தந்த பூஜாவிதி புதுமையாக இருக்கிறதென்று சொன்னால், அப்ப இடைக்காலத்தில் எந்த அளவிற்கு இந்த பூஜாவிதிகள் சமுதாயத்தில் மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும்.

ஆக குறிப்பிட்ட மக்கள் இந்த பூஜாவிதியை மறைத்து விட்டார்கள். நாம் அதை மீண்டும் வெளிக்கொணர வேண்டிய காலம் வந்து விட்டது. இனி வருகின்ற காலம் ஞானசித்தர் காலம். இப்ப பாடலை பார்ப்போம்.

உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு – உதகம் என்றால் தண்ணீர். என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம் என்று நாம் சொன்ன கருத்தை மகான் திருமூலதேவரும் சொல்கிறார்.

ஆக இன்றுமுதல் உனக்கு ஞானம் உள்ளதென்று சுட்டிக்காட்டுவார்கள். தொடர்கின்ற வினையை தினம் பூஜை செய்து போக்கிக் கொள்வான். செடியாகிய தீமை தீர்ந்தது என்று சொல்வார்.

வினை என்பது வளரக்கூடியது. அந்த அடிவேரை அறுத்துவிடுவான். வினையை வளர்க்கக் கூடிய பயிரை அறுத்துவிடுவான்.

படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து – இவன் தகுதியை ஆராய்ந்து பார்த்து நன்றாக சிந்தித்துப் பார்த்து அவனுடைய வருங்காலத்தைப் பார்த்து, நிகழ்காலத்தைப் பார்த்து, முன் ஜென்மம் அனைத்தையும் பார்த்து, கல்வியறிவைப் பார்த்து, சிந்தனையைப் பார்த்து அருள் செய்வார்கள்.

ஆக பார்த்து என்ற வார்த்தைக்கு இத்தனை பொருள் உண்டு.

நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக் – ஞானிகள் இவன் உள்ளம் உருக உருக பூஜிப்பதை சிறிதும் உணர்ச்சியை வெளிக்காட்டாமல் அப்படியே பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அது நமக்குத் தெரியாது.

தாக்கையா மேல் வாசற்குள்ளே சென்று சாக்கிரத்திற் கண்மூடி சதாநித்தம் பாரு – இது நான்காம்படியைப் பற்றி பேசுவதாகும்.

தாக்கையா மேல்வாசற் குள்ளே சென்று
   சாக்கிரத்திற் கண்மூடி சதாநித்தம் பாரு
நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும்
   நோகாமற் பார்த்துவரக் கண் திறக்கும்
ஆக்கையா பொறிகளைந்து மடித்துத் தள்ளில்
   ஆனந்த மதியமுர்தஞ் சிந்துஞ்சிந்தும்
வாக்கையா பேசாதே சமாதிமூட்டு
   மைந்தனே பூசையெல்லாம் வழங்கும்பாரே.

– அகஸ்தியர் பூஜா விதி – கவி எண் 37.

இப்படிப்பட்ட கவியெல்லாம் நான் இதுவரை கூறியதில்லை. இன்றைக்கு பேச வேண்டிய காலக்கட்டம். அதனால் பேசுகிறோம். அந்த பாடலுக்குரிய விளக்கத்தைப் பார்ப்போம்.

தாக்கையா மேல்வாசற் குள்ளே சென்று – இடகலையும், வலகலையும் கீழ்நோக்கி செல்லும். ஞானிகள் சுவாசத்தை மேல்நோக்கி செலுத்துவார்கள்.

சாக்கிரத்திற் கண்மூடி சதாநித்தம் பாரு – சாக்கிரம் என்பது புருவமத்தி. ஒருவன் இந்த இடத்தை கண்மூடி உற்றுநோக்க முடியாது. அடிக்கடி சிந்தனை மாறும். இப்படி உள்ள நிலையையே அவஸ்தை என்று சொல்வார்கள்.

அடுத்து சொப்பன அவஸ்தை என்ற ஒன்று உண்டு. இதற்கு இடம் கண்டஸ்தானம். இங்கேயும் ஒருவன் கண்ணை ஒருநிலைப்படுத்தி பார்க்க முடியாது.

யோகிகள் என்ன செய்வார்கள்? இடகலையையும், பிங்கலையையும் ஒன்றுபடுத்தி ஊசி முனையளவு உள்ள பாதை வழியாக, புருவமத்தியில் செலுத்தி விடுவான். பின்பு உற்று நோக்குவான். தாக்கையா மேல்வாசற் குள்ளே சென்று, சில பேர் வெறும் பார்வை பார்ப்பார்கள். வெறும் பார்வை பார்க்கக் கூடாது. யோகிகள் மட்டும் ஏன் புருவமத்தியை பார்க்கிறார்கள்.

எந்த வாசலிலே வாசியை செலுத்தினார்களோ, அந்த வாசலை உற்று நோக்கி அந்த வாசியை மேல்நோக்கி கொண்டு வருகிறார்கள். வாசியை மேல் நோக்கி கொண்டு வரும்போது என்ன செய்வார்கள் என்பதை மகான் திருமூலர் சொல்வார்,

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற யுள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே.

– திருமந்திரம் – விந்து ஜெயம் – போக சரவோட்டம் – கவி எண் 1937.

யோகி வாசியை செலுத்தி அந்த வாசலை உற்று நோக்கி, உற்று நோக்கி அனலை தட்டி எழுப்புவான். அப்படி எழுப்பும்போது நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும் – உடம்பில் இருக்கும் நோயெல்லாம் தூள்தூளாகிவிடும். நிர்தூளி என்பதற்கு தூளாகும் என்று அர்த்தம்.

நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும்
நோகாமற் பார்த்துவரக் கண் திறக்கும்

யோகிகள் புருவமத்தியில் வாசியை செலுத்திவிட்டு புருவமத்தியை பார்ப்பார்கள். இதுதான் புருவமத்தியை பார்க்கின்ற மக்களின் இரகசியம். சிலர் வெறும் புருவமத்தியை பார்க்கிறார்கள். இவர்களெல்லாம் கனவில் லட்டு, ஜிலேபி சாப்பிடுவது போன்றதாகும்.

கனவில் லட்டு, ஜிலேபி, முக்கனி வைத்து சாப்பிட்டால் வயிறு நிரம்புமா? நிரம்பாது. எனவே மற்றவர்கள் புருவமத்தியை பார்ப்பது பயனற்ற செயல். ஆனால் யோகிகளின் பார்வையை மகான் திருமூலர்,

அத்தாற் பிறவி அவர் இரு கண்களை
வைத்தார் நுனி மூக்கின் புருவத்திடை
நித்தாரமங்கே நினைக்க வல்லார்க்கு
எத்தாலுஞ் சாவில்லை இறை அவனாமே.

யோகிகள் வாசி செலுத்திய வாசலை உற்று நோக்கி, அந்தக் காற்றை மேலே நோக்குவார்கள். அதுதான் பிறவித் துன்பத்தை ஒழிப்பதாகும். அப்படி பார்ப்பதைத்தான் “நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும் நோகாமற் பார்த்துவரக் கண் திறக்கும்” என்று சொல்வார்.

ஆனால் இவன் ஆர்வத்தின் காரணமாக தொடர்ந்து பார்ப்பான். அதுவே அவனுக்கு மரணத்தை உண்டாக்கும். அப்ப நோகாமல் பார்த்துவர கண் திறக்கும் என்பார்.

யோகிகள் அத்தனைபேரும் இந்த தத்துவத்தை உணர்ந்தவர்கள். இவர்கள் நிஷ்டை மேற்கொண்டிருப்பார்கள். கருணைக்கொண்டு இரண்டு கண்களாலும் கூர்பார்வை செலுத்துவார்கள். அவ்வாறு கூர்பார்வை செலுத்தும்போது ஒரு குறிப்பிட்ட நேரம் வந்ததும், ஞானிகள் நிறுத்து என்று கட்டளையிடுவார்கள்.

அப்படி அந்த கட்டளையை மீறினால் என்ன ஆகும்? உடம்பில் அக்கினி மிகுந்து உயிர் போய்விடும். உடம்பில் அக்கினி குறைந்தாலும் ஆபத்து. இப்படி ஒரு இரகசியம் இருக்கிறது. இந்த இரகசியம் பாலை காய்ச்சி எடுப்பது போல் உள்ளது.

ஒருவன் பாலைக் காய்ச்சி எடுக்கும்போது, கணக்காக அனல் இருந்தால் பால் காயும், கணக்கு மீறினால் பால் பொங்கும், கணக்கு குறைந்தால் பால் காயாது.

இதேபோன்று யோகிகள் என்ன செய்கிறார்கள்? ஒரு குறிப்பிட்ட அளவு அக்கினியை சரியாக வைத்திருப்பார்கள். அக்கினி குறைந்தாலும் ஆபத்து, கூடினாலும் ஆபத்து. இதை,

நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும்
நோகாமற் பார்த்துவரக் கண் திறக்கும்
ஆக்கையா பொறிகளைந்து மடித்துத் தள்ளில்
ஆனந்த மதியமுர்தஞ் சிந்துஞ்சிந்தும்
வாக்கையா பேசாதே சமாதிமூட்டு
மைந்தனே பூசையெல்லாம் வழங்கும்பாரே.

இப்ப யோகிகள் ஓராண்டு மௌனமாக இருப்பார்கள், பேசாமல் மௌனமாக இருக்க வேண்டும். இதுதான் மிகமிக கடுமையான அடயோகம். இந்த காலக்கட்டம் நமக்கும் வரலாம், வராமலும் போகலாம் எனக்குத் தெரியாது. யோகிகள் வாசி

செலுத்திய வாசலை உற்று நோக்கி அனலை எழுப்புகின்றார்கள். அப்படி எழுப்புவதால் மதியமுர்தம் சிந்தும் என்பார். மதியமுர்தம் என்றால் அமிழ்தபானம்.

வாசல் திறக்கும், அமிழ்தபானம் சிந்தும். இதைத்தான் மகான் திருமூலர் நொடியில், நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக் – இதற்கு முன்பு இந்த உணர்வே வராது. இதை உணர்வு என்று சொல்லாமல் நுண்ணுணர்வு என்றார். நுணுக்கமான நுண்ணுணர்வுகள் வேண்டும்.

இந்த உணர்வுகள், ஞானிகளை பூஜித்தால்தான் வரும். இந்த உணர்வை நான் பெற்றிருக்கிறேன். நீங்களும் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு நேரம் பேசியிருக்கிறேன். இந்த கவியை எப்போதும் நான் பயன்படுத்த மாட்டேன். இந்த கவி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்பட்ட ஞானத்திலுள்ள மக்களுக்கு சொல்வது. என்னுடைய சீடர்களிலேயே நுணுக்கமான சீடர்கள் யாரென்று ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு இரகசியமாய் சொல்ல வேண்டிய கருத்து.

இந்த கூட்டத்தில் யாரோ புண்ணியம் செய்திருக்கலாம், அதனால் இந்த கவியைப் பற்றி பேசியிருக்கிறோம். இந்த கவியை கேட்டாலே புண்ணியம். இந்த கவியை கேட்டவர்க்கு அடுத்த பிறப்பில் இந்த கவியைப் பற்றி சிந்திக்கும் திறமை வரும். இந்த கவியெல்லாம் மிகவும் அபூர்வமானது, வெறும் கவியல்ல அருட்கவி.

அடுத்து இது கொடிய பிறவியென்றார். இந்த பிறவியை ஒவ்வொருவரும் இனிய பிறவியென்று நினைக்க வேண்டாம். இது கொடிய பிறவி. இதை மகான் திருமூலதேவர் கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே என்றார்.

அதற்கு நாமென்ன செய்ய வேண்டும். நமக்கு பிறப்பற்று போக வேண்டும். பிறப்பற்று போக மனம் மிருதுவாக வேண்டும். அதற்காகத்தான் நாம் பூஜை செய்ய வேண்டும்.

ஒரு பெருநகரத்தில் ஒரு அன்பர் வீட்டில் தங்கியிருந்தேன். பக்கத்து வீட்டில் வேலையாள் ஒருவன் இருந்தான். அவன் காலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை தண்ணீர் எடுத்தான். பிள்ளைகளின் துணிமணி துவைப்பதிலிருந்து, சாக்கடை கழுவது வரை எல்லா வேலைகளும் செய்தான். நான் தை மாதம் அந்த வீட்டில் தங்கியிருந்தேன். தை மாத குளிரில் இடுப்பில் ஒரு முழத் துண்டுடன் அவர்கள் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். தன் உடம்பையே அவர்களுக்காக உருக்கி வைத்திருக்கிறான். அதைப் பார்க்கும்போது என்னடா இப்படி ஒரு ஜென்மம் நீ எடுத்தாய். உனக்கு உதவி செய்ய முடியவில்லையே என என்னையே நான் நொந்து கொண்டேன்.

ஆனால் அந்த வீட்டுக்காரன், எதைப்பற்றியும் எண்ணாமல் டேய் எந்திரி தண்ணீர் தெளிக்கணும் என்றான். இவனும் வயிற்றுப் பிழைப்பிற்காக அடுத்த நாளும் காலை பத்துமணி வரை வேலை செய்கிறான். ஆக இந்த கொடிய உணர்வு ஒழிய வேண்டும். இந்த உணர்வு மனித வர்க்கத்திற்கு வரக்கூடாது. சிங்கம், புலி,

கரடி, காண்டாமிருகம் போன்ற மிருகத்திற்குத்தான் வரும். மனிதனுக்கு வரக்கூடாது.

கனிவு சிந்தை வரவேண்டும் என்பதற்காகத்தான் பூஜை செய்ய வேண்டும். அது இந்த துறைக்கு உள்ள இயல்பு. இன்று பேசப்பட்ட கருத்துக்கள் உங்கள் உள்ளத்தை தொட்டிருக்கும். எப்படி இருந்தாலும் இது ஞானக்கல்வி. இந்த பாடல்கள் ஞானப்பாடல்கள். நாம் பிறவித் துன்பத்தை நீக்குவதற்கு பூஜை செய்ய வேண்டும். மனம் மென்மையாவதற்கு பூஜை செய்ய வேண்டும்.

தொடர்ந்து பூஜை செய்தால் பிறவித்துன்பத்தை ஒழிக்கலாம் என்ற கருத்தை மையக் கருத்தாக கொண்டு எனக்கு தெரிந்த சில கருத்துக்களை திருமந்திரத்திலிருந்தும் திருக்குறளிலிருந்தும் விளக்கம் சொல்லியிருக்கிறேன். அதில் குறையும் இருக்கலாம், நிறையும் இருக்கலாம். கற்றுணர்ந்த பெரியோர்கள் குறையை நீக்கி நிறையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

ஞானிகள் திருஉருவப்படங்கள், ஆசான் அருளிய நூல்கள், தினசரி, மாத நாட்காட்டிகள், ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி, ஒளி குறுந்தகடுகள் (CD) மற்றும் ஞானத்திருவடி நூல் கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

K.**ரவிச்சந்திரன்,**

ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம், ஓங்காரக்குடில், துறையூர்.

✆ 04327–255784, செல்: 94883 91565, 98420 65708, 96551 74078

ஓங்காரக்குடிலாசானிடம் தீட்சை பெற விரும்புகிறவர்கள் தொடர்புக்கு

**ந.நடராஜன்,** கொள்கை பரப்பாளர், செல்: 98947 55784

சென்னை தண்டையார்பேட்டையில்

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள் நல்லாசியுடன்

**சகல நன்மைகளைத் தரும் திருவிளக்கு பூஜை**

நாள் : **06.01.2013 - ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணியளவில்**

இடம் : A.N. இராமசாமி நாடார் திருமண மண்டபம், (A.N.R. திருமண மண்டபம்) தண்டையார்பேட்டை பஸ் டெப்போ அருகில்.

திருவிளக்கு பூஜை தொடர்புக்கு :

J.கிருஷ்ணமூர்த்தி – 93828 82590
K.மலர்விழி – 81443 89888
A.பத்மநாபன் – 94456 33917
V.மூர்த்தி – 93808 32151
K.S.கைலாசம் – 98400 63510
S.ரவி – 98406 12135

## அன்பர்களின் அனுபவ உரை

**2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாண்டிச்சேரி ஈஸ்வரன் கோவிலில் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தால் நடத்தப்பெற்ற சித்தர்கள் பூஜையில், சென்னை வடபழனி அன்பர் D.ரெங்கநாதன் அவர்கள் ஓங்காரக்குடிலில் பெற்ற தன்னுடைய அனுபவங்கள் குறித்து பகிர்ந்து கொண்ட உரையிலிருந்து...**

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

இயற்கைக்கு ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று சக்திகள் உண்டு. ஞானிகள் இயற்கையை வென்றவர்கள். அப்படியென்றால், இயற்கையைவிட கூடுதலான சக்தி அவர்களுக்கு இருக்க வேண்டுமல்லவா? இருக்கிறது. மேலும் இரண்டு சக்திகள். ஆக்கல், காத்தல், அழித்தல் இவற்றோடு மறைத்தல், அருளல் என்ற இரண்டு கூடுதலான சக்திகளும் ஞானிகளுக்கு உண்டு.

அருளல் என்றால் என்ன? ஒரு மனிதன் ‘‘ஓம் அகத்தீசாய நம’’ என்று ஒரே ஒரு முறை அழைத்தால் ‘‘அஞ்சேல் மகனே! நாங்கள் இருக்கிறோம் மகனே!’’ என்று ஒன்பது கோடி சித்தர்களும் யார் எம் தலைவன் ஆசான் அகத்தீசரை அழைத்தது? என்று கூர்ந்து கவனிப்பார்கள். ஒரே ஒரு முறை ஆசான் அகத்தீசர் நாமத்தையோ அல்லது ‘‘ஓம் அகத்தீசாய நம’’ என்ற நாமத்தை சொன்னாலும் அந்த இடத்தில் ஒன்பது கோடி சித்தர்களும் இருப்பார்கள். அவர்கள் நம்மை உற்றுப் பார்ப்பார்கள். அவர்கள் உற்றுப் பார்த்தால்தான் நம் பாவங்கள் போகும். ஆகவே ஞானிகளை பார்க்க வைக்க வேண்டும். அதற்குதான் நாமஜெபம்,

ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம

என்று சொல்ல வேண்டும். இதை எங்களுக்கு சொல்லிக் கொடுத்தது குருநாதர் அவர்கள்தான். இது எங்களது சொந்தக் கருத்தல்ல.

ஆக தங்களுடைய பூத உடலை மறைப்பார்கள். அது மறைத்தல். அருளல் – அன்பர்கள் யாரேனும் அழைத்தால் அக்கணமே தோன்றி அவர்களுடைய கஷ்டத்தை, கூர்ந்து கவனித்து அவ்வப்போது அவற்றை நிவர்த்தி செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் ஞானியர்கள். இதுதான் ஞானிகளுடைய ஆற்றல். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழிலையும் செவ்வனே செய்யக் கூடியவர்கள். அவர்களுக்கு இறப்பும் இல்லை, பிறப்பும் இல்லை.

சரி! ஞானியர்கள் எங்கிருக்கின்றார்கள்? எல்லா இடத்திலும் இருக்கின்றார்கள். எங்கிருந்து ‘‘ஓம் அகத்தீசாய நம’’ என்று அழைத்தாலும்

அந்த இடத்தில் இருப்பார்கள். எங்களது அன்பர் நல்லவாண்டு ஐயா "அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி", "ஓம் அகத்தீசாய நம" என்று ஞானிகளை அழைத்தார்கள். இப்படி அழைக்கும் போது ஞானிகள் இங்கே பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

எப்போதும் நாங்கள் இதுவரை நடத்திய திருவிளக்கு பூஜையில், ஒரே ஒரு திருவிளக்கு வைத்து தீபம் ஏற்றி பூஜையை துவங்குவோம். ஆனால் பாண்டிச்சேரியில் இந்த திருவிளக்கு பூஜையில்தான் நூற்றிஎட்டு திருவிளக்கு ஏற்றியிருக்கின்றோம். அப்படி ஏற்றும்போது நூற்றியெட்டு முறை நாம் ஆசானை அழைத்திருக்கின்றோம்.

சரி! இங்கு நடந்தது கூட்டு பூஜை. பாண்டிச்சேரி அன்பர்கள் மிகவும் புண்ணியவான்கள். எல்லோரும் வந்து கலந்து கொண்டீர்கள். சித்தர்களையும் ஞானிகளையும் எப்படி பூஜை செய்வதென்று தெரிந்து கொண்டீர்கள். இத்தோடு கலைந்து போய்விடக்கூடாது.

இது எல்லோரும் செய்த கூட்டு பூஜை. இந்த பூஜை ஞானிகளை அறிமுகப்படுத்தும் விழா. இதுபோன்ற மிகப்பெரிய விழா ஒன்று பாண்டிச்சேரியில் நடக்க உள்ளது. அதற்காக அன்பர்கள் முத்துவரதன், ராஜாசரவணன் ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்த போகிறார்கள். அப்படி நடக்க இருக்கின்ற மிகப்பெரிய விழாவிற்கு இது முன்னோடி விழா

பாண்டிச்சேரியிலிருந்து இந்த பூஜைக்கு வந்திருக்கின்ற அத்தனை மக்களும் தொடர்ந்து வந்து கலந்து கொண்டால் மாபெரும் விழா ஒன்று இங்கே எடுக்க முடியும். இது கூட்டு வழிபாடு. இதையே நாம் வீட்டில் தினந்தோறும் காலை, மாலை முடிந்தால் இரவு பன்னிரெண்டு மணிக்கு இரண்டு நிமிடமாவது ஆசானுடைய நாமத்தை சொல்ல வேண்டும்.

இப்போது நான் சொல்லப்போகின்ற விஷயத்தை நீங்கள் எல்லோரும் கவனமாக கேட்க வேண்டும். நாம் தினம் வாகனங்களில் (கார், பைக்) செல்கிறோம். வாகனத்தை எடுக்கும்போது, "ஓம் அகத்தீசாய நம" என்று ஆசான் நாமத்தை சொல்லுங்கள். ஒரு நல்ல காரியம் பேசப்போகிறோம், கல்யாண சம்மந்தம் செய்யப்போகிறோம். அந்த நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பு பன்னிரெண்டு முறை "ஓம் அகத்தீசாய நம" ஆசான் நாமத்தை சொல்லுங்கள். பன்னிரெண்டு முறை ஆசான் நாமத்தை சொல்லிவிட்டு அப்புறம் பேச ஆரம்பியுங்கள். இப்படி வீடு வாங்க போகும் போதும் சரி! அல்லது தொழில் துவங்கப்போகும்போதும் சரி! இப்படி நாமஜெபம் சொல்லிவிட்டு துவங்க வேண்டும்.

ஒரு பிரச்சனையை சந்திக்கப் போகின்றோம். அங்கே ஆசானுடைய நாமத்தை பன்னிரெண்டு முறை சொல்லுங்கள். சொல்லிவிட்டு, அப்பா நான்

இங்கே வந்திருக்கிறேன். என்ன பேசுவது? என்பது எனக்குத் தெரியாது. ஆசானே என்னுடைய சிந்தையிலும் நாவிலும் தங்கியிருந்து என்னை பேச வையுங்கள். கேட்பவர்களுடைய சிந்தையில் தங்கியிருந்து கேட்க வையுங்கள். நான் மேற்கொள்ளும் காரியத்தை எனக்கு அனுகூலமாக கைகூட வையுங்கள் என்று கேட்க வேண்டும். இவையெல்லாம் சின்ன சின்ன சூட்சுமங்கள். இதெல்லாம் குருநாதர் அவர்களிடம் படிப்படியாக கற்றுக் கொண்ட சூட்சுமங்கள். நாங்கள் குருநாதரிடம் கற்றுக் கொண்டதை உங்களுக்கு சொல்லித் தருகின்றோம்.

எனக்கு வயது முப்பத்திரெண்டு ஆகிறது. ரெங்கநாதன் தினம் ஐநூறு மக்களுக்கு அன்னதானம் செய்கின்றார் என்று அன்பர் சொன்னார். முப்பத்திரெண்டு வயதில் தினம் ஐநூறு பேருக்கு அன்னதானம் செய்வது என்பது எப்படி சாத்தியம்? உண்மையில் ஐநூறு பேருக்கு அன்னதானம் செய்வது என்பது குறைவு.

முப்பத்திரெண்டு வயதில் ஐயாயிரம் பேருக்கு அன்னதானம் செய்ய வேண்டும். முப்பத்திரெண்டு வயதில் ஐநூறு பேருக்கு என்பது ரொம்ப ரொம்ப குறைவு. ஏனென்றால், எங்களுக்கு கிடைத்திருக்கின்ற ஆசான் மிகப்பெரிய ஆசான். ஐயாயிரம் பேரென்ன? ஐந்து இலட்சம் பேருக்கு அன்னதானம் செய்யும் வல்லமையையும் எங்களுக்கு கொடுப்பார்கள்.

ஏனென்றால் நாங்கள் புண்ணியத்தைக் கொண்டு புண்ணியத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கின்றோம். நாங்களெல்லாம் புண்ணியபலத்தை கொண்ட பெரிய பெரிய புண்ணிய பணக்காரர்கள். ரொம்ப புண்ணிய வசதி உள்ளவர்கள். ஏனென்று கேட்டால் நாங்கள் புண்ணியத்தை மட்டும் சாம்பாதிப்பதை குறிக்கோளாக வைத்துக் கொண்டுள்ளோம். எங்களுக்கு பொருள் வந்தால் அதை வைத்து அருளை சம்பாதிப்போம்.

இப்படிப்பட்ட சூட்சுமத்தை ஓங்காரக்குடில் ஆசான் எங்களுக்கு சொல்லிக் கொடுத்துள்ளார்கள். பொருள் கிடைத்தால் அதை வைத்து அருளை எப்படி சம்பாதிப்பது? இதை கற்றுக் கொள்ள வேண்டுமல்லவா? அதுதான் ரொம்ப முக்கியம்.

சரி! வடபழனியில் தினம் ஐநூறு பேருக்கு அன்னதானம் நடந்து கொண்டுள்ளது. இதை அன்பர்கள் சொன்னார்கள். உண்மையிலே சொல்கிறேன், இதை நான் செய்யவில்லை.

இதற்கு சின்ன சம்பவத்தை கூறுகிறேன். சென்னைக்கு வந்து தனியாக தொழில் ஆரம்பித்து மூன்று மாதம் இருக்கும். குடில் அன்பர் மாதவனை உங்களுக்கு நன்றாக தெரியும். அவர் என்னுடைய கடைக்கு வந்து, என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, ஏங்க! நீங்கள் தினம் ஐந்து பேருக்கு

அன்னதானம் ஆரம்பிக்கலாமே? என்று சொன்னார். ரொம்ப பழக்கமான விஷயத்தை சொல்வது போல இருந்தது. அந்த யோசனை வந்தது ஆசானின் ஆசி! அப்படியே செய்யலாம் அண்ணே! ஒன்றும் சிரமம் இல்லை என்றேன்.

அன்பர் மாதவன், ஒரு ஐந்து பேருக்கு ஆரம்பியுங்கள். நாமிருக்கும் இடத்தில்தான் அன்னதானம் செய்ய வேண்டுமென்று சொன்னார். சரியென்று நான் முதன்முதலில் ஐந்து பேருக்கு அன்னதானம் தினசரி செய்ய ஆரம்பித்தேன்.

ஆனால் ஐந்து பேருக்கு ஆரம்பித்து அது இருபத்தைந்து ஆச்சு, பிறகு ஐம்பது ஆச்சு, எழுபது, நூற்றி இருபத்தைந்து, நூற்றி ஐம்பது என்று போய்க்கொண்டே இருந்தது. ஆனால் தற்போது எங்களது குருநாதர் அவர்களது ஆசியால் தினசரி ஐநூறு பேருக்கு அன்னதானம் செய்கின்ற அளவுக்கு வளர்ந்தது. சரி! இது எப்படி சாத்தியம்.

ஐந்து பேருக்கு துவங்கி ஐநூறு பேருக்கு வந்தது. இதில் நான் ஒன்றுமே செய்யவில்லை. நான் தினசரி காலையில் பூஜை செய்வேன். நான் சாப்பிட மறந்தாலும், குளிக்க மறந்தாலும், எதை மறந்தாலும் பூஜை செய்வதை மறக்கவே மாட்டேன்.

காலையில் படுக்கையை விட்டு எழும்முன் “ஓம் அகத்தீசாய நம”, “ஓம் அகத்தீசாய நம” என்று பன்னிரெண்டு முறை சொல்வேன். அடுத்ததாக எழுந்து ஆசான் திருஉருவப் படத்தின் முன் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவேன். அப்பா! பொழுது விடிந்து விட்டது. நான் என்னை உங்களிடம் ஒப்படைக்கிறேன். இன்று என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று நீங்கள்தான் சொல்லித்தர வேண்டும். இது என்னுடைய முதல் வேண்டுகோள்.

அடுத்து காலைக்கடன்களை முடித்து குளித்து, நறுமணம் உள்ள ஊதுபத்தி வைத்து ஐந்து நிமிடம் பூஜை செய்வேன். ஐந்து நிமிட பூஜையில் பிரதான வேண்டுகோள் ஒன்று உண்டு. முக்கியமான வேண்டுகோள். அன்னதானத்திற்குரிய வேண்டுகோள் ஒன்று இருக்கிறது. தாயே! அகத்தீஸ்வரா என்று ஆசான் அகத்தீசரை ஆரம்ப காலத்தில் அழைத்து வந்தோம். இப்பொழுது எங்கள் உள்ளம் கனிய கனிய அகத்தீசர் அம்மாவாக காட்சி தருகிறார்கள். இப்பொழுது தாயே அகத்தீஸ்வரா தந்தையே குருநாதா! குடில் ஆசானை தந்தையே குருநாதா! என்று கூப்பிடுவோம்.

தாயே அகத்தீஸ்வரா இன்றைய பொழுது அன்னதானம் மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டும். சமைக்கப்படும் உணவு ஆசான் பார்வைபட்ட உணவாகவும், ஏழை எளியவர்களுடைய பசியை தீர்க்கக் கூடிய அருமருந்தாகவும் இருக்க வேண்டும். ஆசானாகிய நீங்களே உணவின் சுவையாக மாறி அந்த உணவு அருட்பிரசாதமாக இருப்பதற்கு எங்களுக்கெல்லாம் ஆசி கொடுக்க வேண்டும்.

இப்படி ஆசானே அந்த உணவின் சுவையாக மாற வேண்டுமென்று பூஜையில் கேட்போம். தாயே அகத்தீஸ்வரா! இன்றைய பொழுது அன்னதானம் மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டும். சமைக்கப்படுகின்ற உணவு ஆசான் பார்வை பட்ட உணவாகவும், ஏழை எளியவர்களின் பசியை தீர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஆசானே அதனுடைய சுவையாகவும், அருட்பிரசாதமாக மாற வேண்டும். வருகின்ற எல்லா மக்களுக்கும் போதுமான அளவு உணவு கிடைக்கவும், யார் யாருக்கெல்லாம் இந்த உணவு போய்ச்சேர வேண்டுமென்று ஆசான் அவர்கள் நிர்ணயிக்கின்றார்களோ, அவர்களுக்கு உரிய முறையில் போய்ச்சேரவும், எங்களுக்கு ஆசி கொடுங்கள் தாயே அகத்தீஸ்வரா! என்போம்.

ஆசானுடைய திருவருள் கடாட்சத்தால், எங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த அன்னதானத்தில் பகைவர்களாலும், கயவர்களாலும் இடையூறு வந்துவிடாது இருக்கவும், எங்களை யாரும் நேருக்குநேர் இடரிப் பேசி விடாது இருக்கவும், அப்படியே இடரிப் பேசினாலும், அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ளக்கூடிய அறிவும் பரிபக்குவமும் எங்களுக்கு தந்தருளுங்கள் தாயே அகத்தீஸ்வரா! என்று ஆறரை ஆண்டுகளாக பூஜையில் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். இது ஒன்றுதான் எங்களுடைய வேண்டுகோளாக இருக்கிறது. இதை மட்டுமே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அன்னதானம் மேலும் மேலும் உயர வேண்டும் என்று மட்டுமே நான் பூஜையில் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஆசான் குருநாதர் அவர்கள் வடபழனியில் நடக்கும் அன்னதானத்தைப் பற்றி சொல்லும்போது மிகச்சிறப்பாக நடந்து கொண்டிருக்கப்பா! என்று சொல்வார்கள். இதுதான் எனது அனுபவம். இது வெற்றி என்று அன்பர்கள் சொன்னால், அந்த வெற்றிக்கு காரணம் ஆசான் அவர்கள் எங்களுக்கு சொல்லிக் கொடுத்த சூட்சுமம்தான். நான் இந்த பூஜையில் வைத்த வேண்டுகோள்தான்.

ஆக, பாண்டிச்சேரி அன்பர்களின் திருவடிகளை பணிந்து, உங்கள் ஒவ்வொருவருடைய காலை தொட்டு கும்பிட்டு கேட்டுக் கொள்கின்றோம். நீங்கள் தினந்தோறும் காலை மாலை தவறாமல் ஆசான் அகத்தீசரை பூஜை செய்யுங்கள்.

திருக்குறள் புத்தகம் ஒன்று வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள். திருக்குறள் புத்தகம் ஒன்று வீட்டில் இருந்தால் தெய்வம் நம் வீட்டில் இருக்கின்றது என்று அர்த்தம். திருக்குறளை தொட்டு வணங்குங்கள். கற்று கரையேறுங்கள்.

ஓங்காரக்குடிலாசான் அவர்களுடைய திருஉருவத்தை சென்று கண்டு தரிசியுங்கள். குடில் மண்ணை மிதியுங்கள். ஓங்காரக்குடில் மண்ணை மிதிப்பதற்கு ரொம்ப புண்ணியம் செய்திருக்க வேண்டும். குடில் மண்ணை தொட்டு கும்பிட்டு வாருங்கள்.

பாண்டிச்சேரியில் இதுபோல் மாதம் ஒரு முறை கூட்டத்தை கூட்டுங்கள். பாண்டிச்சேரியில் சிறப்பான நிகழ்ச்சி நடக்க இருக்கின்றது. அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்.

இன்றையிலிருந்து இந்த நிமிடத்திலிருந்து பூஜை செய்ய ஆரம்பியுங்கள். ஞானிகள் வழிபாடே உண்மை ஆன்மீகம். பூஜை செய்யுங்கள். ஓம் அகத்தீசாய நம என்ற தாரக மந்திரத்தை உங்களுக்கு சொல்லியிருக்கின்றோம். அதை எப்போது வேண்டுமானாலும் வண்டியில் போகும்போது கூட சொல்லிக்கொண்டு செல்லுங்கள்.

ஆக இந்த பாண்டிச்சேரி மிகவும் புண்ணிய பூமி. எங்களுக்கு தெரியும். நாங்கள் எங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு வந்து, இந்த பூஜையில் கலந்து கொண்டு தொண்டு செய்கிறோம் என்றால், சாதாரணமான ஊர் கிடையாது இது. வல்லமை பொருந்திய ஊர். ஞானிகள் நடமாட்டம் இருந்த ஊர். ஞானிகளின் பார்வை பட்ட ஊர். ஆகவே அன்பர்கள் அனைவரும் தினந்தோறும் காலை மாலை தவறாமல் ஞானிகளை பூஜை செய்யுங்கள்.

அடுத்த கூட்டம் நடக்கும்போது உங்களுக்குத் தெரிந்த நண்பர்கள் இரண்டு பேரை அழைத்து வாருங்கள். ஆகவே ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் சார்பாக இந்த கூட்டத்தை சிறப்பாக சிறந்த முறையில் நடத்திக் கொடுத்த பாண்டிச்சேரி அன்பர்கள் எல்லோருக்கும் எங்களுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகின்றேன். நன்றி! வணக்கம்!

......

**05.05.2012, சித்ரா பௌர்ணமி விழாவில் அன்பர், முன்னாள் நகர்மன்ற தலைவர், உயர்திரு குருஜி ராஜேந்திரன் அவர்கள் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டதிலிருந்து....**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி, சற்குருநாதா, சண்முகநாதா, அருட்பெருஞ்ஜோதி அகத்தீசாய நம, சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம, ஓம் அகத்தீசாய நம, ஓம் நந்தீசாய நம, ஓம் திருமூலதேவாய நம, ஓம் கருவூர்தேவாய நம, ஓம் இராமலிங்கதேவாய நம, ஓம் திருவள்ளுவதேவாய நம, ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி, ஓம் சுப்ரமண்ய தேவாய நம, ஓம் ரெங்கராஜ தேசிக சுவாமிகள் திருவடிகள் போற்றி இப்படி நான் தினமும் ஒரு ஐயாயிரம் முறையாவது இந்த நாமங்களை சொல்வேன்.

இதனால் என்னுடைய வாழ்வில் எல்லா காரியங்களும், எந்தவித தடங்கல்கள் இல்லாமல் நடக்கிறது. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்ற மனோபாவத்துடனும், எந்தவித ஆசாபாசங்களும் இல்லாமலும் ஓங்காரக்குடிலாசான் அவர்கள் ஆசியினால் நல்லபடியாக எனது வாழ்க்கை அமைந்துள்ளது.

என்னுடைய அறுபதாவது பிறந்த நாளை முன்னிட்டு, ஆசான் அவர்களுடைய ஆசியைப் பெற்று என்னை பேச அழைத்ததற்கு நான் என்ன புண்ணியம் செய்தேனென்று எனக்கு தெரியவில்லை.

முதலில் நான் இறைவனை வணங்கியது கிடையாது. கடவுள் ஒன்று இல்லையென்று நான் நினைத்தேன். ஓங்காரக்குடிலிற்கு வந்ததற்கு பிறகுதான், ஆன்மீகத்திலே ஒரு பற்று ஏற்பட்டது. இந்த குடிலை நாடி வந்தேன். இந்த குடிலை சார்ந்த பிறகு எனக்கு என்னென்ன நன்மைகள் ஏற்பட்டது என்றும், இந்த குடிலை நாடி வந்தோமென்றால் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதையும் உணர்ந்து, நான் இப்பொழுதும் ஆசானின் திருவடிகளைப் பற்றி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

ஓங்காரக்குடிலாசானுடைய ஆசியினால் என்னுடைய வாழ்க்கையில், நிறைய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவைகளில் ஒன்றிரண்டை மட்டும் சொல்கிறேன்.

என்னுடைய தந்தையார் துறையூர் நகரசபை தேர்தலில் தலைவராக போட்டியிட ஐயாவிடம் வந்து ஆசி கேட்டார்கள். என்னுடைய ஓட்டு உனக்குத்தான் நீ தலைவர் பதவிக்கு நில்லுய்யா! என்று ஐயா அவர்கள் ஆசி வழங்கினார்கள். ஐயாவினுடைய ஆசியைப் பெற்று சுயேட்சையாக என்னுடைய தந்தையார் துறையூர் நகரசபை தலைவர் பதவிக்கு போட்டியிட்டார்; வெற்றியும் பெற்றார். துறையூர் நகர்மன்றத்திற்கு முதல் தலைவர் என்ற சிறப்பையும் பெற்றார்.

இரண்டாவது முறையாக நான் ஐயாவினுடைய ஆசியைப் பெற்று தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக துறையூர் நகர்மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டேன். அதில் வெற்றியும் பெற்று துறையூர் நகர்மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். துறையூர் நகர்மன்றத்திற்கு முதல் தலைவர் என்னுடைய தந்தையார், நான் இரண்டாவது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஆக இவையெல்லாம் ஐயாவினுடைய ஆசியினாலும், கருணையினாலும் நடந்தது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

அடுத்து நீங்கள் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் குடிலிற்கு வந்து ஐயாவையே முழுமையாக நம்பி, ஐயாவின் மனசிலே இடம் பெற்றுவிட்டால், நமக்கு வாழ்க்கையில் எந்த பிரச்சனையும் இல்லை. இதற்கும் நிறைய அனுபவங்கள் எனக்கு உண்டு. என்னுடைய மூத்த பெண்ணிற்கு திருமணம் செய்வதற்காக ஜாதகம் பார்த்தேன். இந்த ஜாதகம் வேண்டாமென்று வேறிடத்தில் பாருங்கள் என்று சொன்னார்கள்.

ஆனால் அதே ஜாதகத்தை ஐயாவிடம் கொண்டு வந்து கொடுத்தேன். ஐயா! இந்த ஜாதகத்தையே நீ முடித்துவிடு என்று ஒரே வார்த்தையில் சொன்னார். குழந்தை பாக்கியம் கிடைக்காது என்ற காரணத்தினால்தான் ஜோசியர்கள் வேண்டாமென்றார்கள். ஆனால் ஐயாவிடம் இதை சொன்னபோது, இதையே நீ முடி உனக்கு ஆசியிருக்கு என்றார். பிறகு

திருமணம் நடந்தது. ஒரே வருடத்தில் என் பெண்ணுக்கு குழந்தை பிறந்தது. அதனாலே ஐயாவினுடைய ஆசியை முழுமையாக நம்பி அவர்கள் ஆசியையும் பெற்று, ஐயா அவர்கள் எது சொன்னாலும், அதை நான் அப்படியே செய்துவிடுவேன். அவர் கிணற்றில் விழச் சொன்னாலும், ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் விழச் சொல்கிறார் என்று விழுந்துவிடுவேன். அந்த அளவிற்கு ஐயாவினுடைய ஆசி எனக்கு இருக்கு.

இதே போன்று இரண்டாவது பெண்ணுக்கு திருமணம் ஆகி, ஐந்து வருடமாக குழந்தையில்லை. அவர்களும் எங்கெங்கேயோ சென்று வைத்தியம் பார்த்தார்கள். நான் ஏதோ செய்யுங்கள் என்று விட்டுவிட்டேன். பிறகு ஐந்து வருடம் கழித்து ஐயாவிடம் அழைத்து வந்தேன். நடந்ததையெல்லாம் சொன்னேன். ஐயா ஒரே வார்த்தையில் தினமும் குளித்துவிட்டு ஓம் அகத்தீசாய நம என்று ஒரு ஐந்து நிமிடம் சொல்ல சொல்லுங்கள் என்று சொன்னாங்க. என்னுடைய மகளும் அப்படியே நாமஜெபம் செய்தார். நானும் தினமும் போன் செய்து, இன்று நாமஜெபம் செய்தாயா என்று கேட்பேன். ஒரே ஒரு முறை வந்து ஐயாவிடம் வந்து ஆசி பெற்றுக்கொண்டதோடு சரி! அடுத்த பத்தாவது மாதத்தில் குழந்தை பிறந்தது.

அடுத்து என்னுடைய சகலையின் மனைவிக்கு முதல் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. இனிமேல் குழந்தை பாக்கியமே கிடைக்காதா என்று ஏங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஐயாவிடம் அழைத்து வந்தேன். ஐயாவும் ஆசியிருக்கு என்றார்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்றார்கள். பிறகு அவங்க கருவுற்றாங்க. பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்கு சென்றோம். குழந்தை தலை திரும்பி விட்டது. ஆபரேசன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டுமென்றார்கள். ஆபரேசனுக்கு தயார் செய்து விட்டார்கள். ஆபரேசன் தியேட்டருக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

நான் ஐயாவிடம் இந்த மாதிரி இருக்கைய்யா என்று சொன்னேன். ஒரு பிரச்சனையும் வராது, ஆசியிருக்கப்பா என்று சொன்னார்கள். டாக்டரம்மா ஆபரேசன் தியேட்டருக்கு வந்தார்கள். அப்போது யாரோ ஒருவர் வந்து அந்த அம்மாவிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஐயாதான் அந்த அம்மாவிடம் யாரையோ அனுப்பி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தேன். அந்த டாக்டரம்மா அவரிடம் பேசிவிட்டு ஆபரேசன் தியேட்டர் போவதற்குள்ளே, சுகப்பிரசவம் ஆகிவிட்டது.

ஏற்கனவே முதல் குழந்தை இறந்த நிலையில், இந்த குழந்தைக்கு என்னாகுமோ? ஏதாகுமோ? ஆபரேசன் செய்ய வேண்டுமென்கிறார்களே? என்று பயந்து கொண்டிருந்த வேளையில், டாக்டரம்மாவும் யாருடனோ பேசிவிட்டு ஆபரேசன் தியேட்டருக்கு தாமதமாக வருவதற்கும் சுகபிரசவம் ஓங்காரக்குடிலாசான் ஆசியிலே நடந்தது. இந்த நிகழ்ச்சியினால் அவர்களுக்கும் ஓங்காரக்குடிலாசான் மேல் பற்று வந்தது.

அவர்கள் புதுக்கோட்டையில் வசிக்கிறாங்க. இப்ப அந்த சின்ன பையன், திடீர்னு எனக்கு குடில்ல போய் சாப்பிடனும் போல இருக்குன்னு சொல்வானாம். இப்படி ஒரு உணர்வு வந்து அவனை தூண்டுது. இந்த மாதிரி என்னுடைய நிறைய அனுபவங்கள் குடிலை சார்ந்ததும் பெற்றேன்.

நான் இதற்கு முன்பு சாமியே கும்பிட்டதில்லை. நான் குடிலுக்கு வந்ததற்கு பிறகுதான் வணங்க ஆரம்பித்தேன். ஐயா! வாரம் ஒருமுறையாவது குடிலில் சாப்பிட வேண்டுமென்பார். என் மனைவியும் நானும் குடிலில் வந்து வாரம் ஒரு முறை சாப்பிடுவோம். எந்தவொரு காரணமும் இல்லாமல் ஐயா அவர்கள் சொல்ல மாட்டார்கள். நாங்கள் ஐயாவை முழுமையாக நம்பினோம். எனவே நீங்களும் குடிலை நம்பி, ஓங்காரக்குடிலாசான் காட்டும் வழியை கடைபிடித்தீர்கள் என்றால், ஆசான் மனதில் இடம் பிடித்து விடலாம். அப்படி ஆசான் மனதில் இடம் பிடித்து விட்டால், உங்களுக்கு வாழ்க்கையில் எந்த பிரச்சனையும் வராது.

பிறகு ஒரு முறை வெளிநாடு பயணம் சென்றோம். ஐயாவினுடைய ஆசியை பெற சென்றோம். விமானத்தில் ஏறும்போது ஓம் அகத்தீசாய நம என்று சொல்லு. உனக்கும் பாதுகாப்பு, அந்த விமானத்தில் பயணிக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பு, என்று எங்களுக்கு சொல்லி, நாமஜெபங்களை சொல்ல சொன்னார். எனவே இப்பொழுதெல்லாம் நான் எங்கு சென்றாலும் நாமஜெபம் சொல்லிக்கொண்டே செல்கிறேன். இதுபோன்று பிரயாணம் செய்யும் போதெல்லாம் நாமஜெபம் நீங்கள் சொன்னீர்கள் என்றால், உங்களுக்கும் பாதுகாப்பு, மற்ற பயணிகளுக்கும் பாதுகாப்பு. இப்படி ஓம் அகத்தீசாய நம என்று நாமஜெபம் சொல்வது சுலபமான ஒன்று. இதை எல்லோரும் சொல்லலாம்.

துறையூர் நகரம் மிக நீண்ட காலமாக வறட்சியாலும், குடிநீர் பிரச்சனையாலும் அவதிப்பட்டு கொண்டிருந்தது. நான் தலைவராக பொறுப்பேற்றவுடன் ஏற்கனவே திட்டத்தில் இருந்த காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தை ஐயா ஆசியால் மேலதிகாரிகளை சந்தித்து, நடைமுறைக்கு கொண்டு வந்து அரசின் அனுமதியைப் பெற்றேன். அனுமதி கிடைத்ததும் ஐயாவை தரிசித்து திட்டம் தடையில்லாமல் நல்லபடி மக்களுக்கு பயன்படும்படி இருக்க ஆசி வேண்டுமென கேட்டேன். பொதுவாக திட்ட காலத்திற்குள்ளாக எந்த பணியும் முடிப்பது சாத்தியமில்லை. ஆனால் பன்னிரெண்டு மாதக்கெடு விதிக்கப்பட்டு முசிறி முதல் துறையூர் வரை முப்பது கிலோமீட்டர் நீளமுள்ள காவிரி கூட்டு குடிநீர் திட்டம், அதன் திட்டகாலமான பன்னிரெண்டு மாதத்திற்கு முன்னரே ஐயா ஆசியினால் பதினோரு மாதத்திற்குள்ளாகவே நிறைவேறி துறையூர் மக்கள் குடிநீர் வசதி பெற்றனர். திட்டம் முடிந்து திட்ட அறிக்கை சமர்ப்பித்து மேலதிகாரிகளை சந்தித்தபோது எல்லா அதிகாரிகளும் இதுவரை இப்படி திட்டகாலத்திற்குள் மக்கள் நல திட்டங்களை யாரும் முடித்ததில்லை எனக்கூறி அனைவரும் கைகுலுக்கி என்னை பாராட்டினர். மிகக் குறுகிய காலத்திற்குள் முடிக்கப்பட்ட பணி என சிறப்பு அளித்தனர்.

இதுபோன்று என் வாழ்வில் ஐயா ஆசியினால் அனேக அற்புதங்கள் நடந்துள்ளன. எனது மனைவிக்கு இதயத்திற்கு இரத்தம் சப்ளை செய்யும் இரத்தக்குழாய் திடீரென சுருங்கி விட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து 1செ.மீ குறுக்களவுக்கு கீழே இரத்தக்குழாய் அளவு வந்தால் கண்டிப்பாக பைபாஸ் ஆபரேசன் செய்யவேண்டுமென சொல்லிவிட்டனர். திருச்சியில் பரிசோதனை செய்தோம். 0.85 செ.மீ தான் இருந்தது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென கூறிவிட்டனர். நான் உடனே ஐயாவை வந்து தரிசித்து பிரச்சனையை சொன்னேன். அதெல்லாம் ஒன்றுமில்லை ஆசான் ஆசி இருக்கிறது, பயப்பட வேண்டாம், சரியாகிவிடும் தைரியமாக செல்லுங்கள் என கூறினார். எனினும் சென்னைக்கு சென்று பெரிய மருத்துவமனையில் மீண்டும் அறுவை சிகிச்சை செய்ய பரிசோதனை செய்தோம். என்ன ஆச்சர்யம் அந்த பரிசோதனையில் 1.5செ.மீ குறுக்களவு உள்ளதாக பரிசோதனை முடிவுகள் வந்தது. டாக்டர்கள் அதிசயமாக இருக்கிறது என கூறினார். ஏனெனில் முதல் நாள் 0.85 மறுநாள் 1.5 என முடிவுகள் மாறவும் சந்தேகப்பட்டு மீண்டும் வேறு பரிசோதனை கூடத்தில் சோதித்தனர். அங்கும் அப்படி 1.5 என வந்தது. டாக்டர்கள் சந்தேகம் தீராமல் மீண்டும் மற்றொரு இடத்தில் பரிசோதித்தனர், அங்கும் 1.5 என வரவே இறுதியில் 1.5 செ.மீ குறுக்களவு இரத்தக்குழாய் உள்ளது, அறுவைசிகிச்சை தேவையில்லை ஆரோக்கியமாக இருக்கிறார். நீங்கள் வீட்டிற்கு செல்லலாம் என கூறி அறுவைசிகிச்சை இல்லாமலேயே அனுப்பிவிட்டார். இப்படி பல அற்புதங்கள் எனது வாழ்வில் நடந்துள்ளது. குடிலாசானை மனமார நம்புங்கள், நீங்களும் அற்புதத்தை உணர்வீர்கள்.

எனக்கு மேடையில் அதிகம் பேசி பழக்கமில்லை. ஐயா பேச சொன்னாங்க. அதனால் என்னுடைய அனுபவங்களை சொன்னேன். நீங்கள் ஐயாவை நம்பி, அவர்களுடைய திருவடியைப் பற்றினால் உங்களுக்கு வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்று சொல்லி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

## அன்பர்கள் கவனத்திற்கு...

அன்பர்கள் பலர் குடிலாசான் அரங்கமகாதேசிகர் ஆசியினால், தங்கள் வாழ்வில் பலவிதமான முன்னேற்றங்களையும், அவர்கள் வேண்டுகோள்களும், கோரிக்கைகளும் நிறைவேறி பலவிதமான நற்பலன்களை பெற்றுள்ளார்கள். அவர்கள் பெற்ற அந்த அனுபவங்களை பிற அன்பர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறவர்கள் ஞானத்திருவடி நூலின் மூலம் அனைவரும் அறிய பகிர்ந்து கொள்ளலாம். அன்பர்கள் தாங்கள் அடைந்த அனுபவங்களை “ஆசிரியர், ஞானத்திருவடி மாத இதழ், 113, நகர் விரிவாக்கம், துறையூர் – 621010” என்ற முகவரிக்கு கடிதங்கள் மூலம் அனுப்பினால், தகுதியுள்ள கடிதங்கள் ஞானத்திருவடி மாத இதழில் பிரசுரிக்கப்படும்.

திருச்சி மாவட்டம், துறையூர்,

ஓங்காரக்குடிலாசான், சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள்

# மகான் ஔவையாரின் ஆத்திசூடிக்கு அருளிய அருளுரை

## 21. நன்றி மறவேல்

உலகில் தோன்றிய உயிர்களில், மற்ற உயிர்களுக்கு இல்லாத ஒரு தனிப்பண்பு மனித சமுதாயத்திற்கு உண்டு. அதுதான் தன் இனத்தின் பிற உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு அவ்வுயிர்கள் கேட்காமலேயே தானே முன்னின்று அவ்வுயிர்படும் துன்பத்தைக் களைய உதவி செய்ய முற்படுகின்ற, உதவி மனப்பான்மையாகிய உயர்ந்த பண்பாகும். இப்படி பிற உயிர் துன்பத்தை களைவது என்பது மற்றைய உயிர்களிடம் இல்லாதபடியால் மனிதன் இவ்வுலக உயிர்களில் சிறந்தவனாக கருதப்படுகிறான். பிற உயிர்கள் அவை அவை வாழ்வதற்காக போராடியும், தேடியும், அலைந்தும் தனக்குத் தேவையானவற்றை தாமே செய்து கொள்கின்றன அல்லது கூட்டாக செய்து கொள்கின்றன. அப்படி இயலாதபோது பிற உயிரினங்கள் அவற்றின் தேவைக்காக மற்ற உயிரினங்கள் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் மனிதனோ எல்லோரும் கூடிய ஒரு கூட்டுசமுதாய வாழ்க்கை முறையை உண்டாக்கி அச்சமுதாய வாழ்வின் மூலம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தும் வலிமை உடையோர் எளியோரை பராமரித்தும் வாழக்கூடிய ஒரு தனித்தன்மையான உணர்வுகளுடன் வாழ்கிறான்.

ஒரு கிராமமோ, நகரமோ அங்குள்ள மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து சார்ந்து வாழ்கின்ற ஒரு கூட்டு சமுதாய வாழ்க்கை அமைப்பில் உள்ளது. இதில் ஒருவர் படும் துன்பத்தை பார்த்து தானாகவே துன்பப்படுவர், கேட்காமலேயே உதவி செய்து அவரது கஷ்டத்தை போக்கும் மனப்பான்மை உள்ளவர்கள் உள்ளனர். அவர்கள் மிக உயர்ந்த பண்பாளராவார். ஒரு சிலர் துன்பப்படுகிறேன் உதவி செய் என்று கேட்டால், உதவி செய்வார்கள். அவரும் ஒரு வகையில் பாராட்டப்பட வேண்டியவர்தான். இப்படி ஒருவர் நாம் கேட்காமலேயே உதவி செய்த அந்த நன்றியை நாம் மறக்கக்கூடாது என்பது நன்றி மறவாமை ஆகும்.

சென்னையில் இருந்து ஆலயச் சுற்றுலா செல்ல, ஒரு பெரும் செல்வ வளமிக்க குடும்பம் முடிவு செய்து, தம் குடும்பத்தினரோடு வாகனத்தில் சுற்றுலா சென்றனர். அவ்வாறு சுற்றுலா செல்கையில் அவர்கள் திருச்செந்தூர் முருகன் கோவிலை அடைந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு பின்னர் அவ்வூரில் உள்ள உணவகத்தில் உணவருந்தினர். அப்படி உணவருந்தி விட்டு பில்லிற்கு பணம் கொடுக்க ஹோட்டலில் உள்ள முதலாளியிடம் அந்த செல்வந்தர் சென்றார். அவரது சட்டையில் கையை விட்டு பணத்தை தேடினார். ஆனால் பணம் இல்லை.

யாரோ அவரது பர்ஸை திருடிவிட்டனர். பில்லிற்கு பணம் கட்ட முடியாமல் திகைத்தனர். அக்குடும்பத்தினர் என்ன செய்வது? வெளியூரில் வந்து இப்படி நடந்து விட்டதே! யாரைத் தெரியும்! நாம், பணம் பறிபோய்விட்டது என்று சொன்னால் யாரும் நம்புவார்களா? என்றெல்லாம் எண்ணி அவர் தடுமாறினார். இதைப் பார்த்த அவரது மனைவி கடைக்காரரிடம் ஐயா பணம் திருடு போய்விட்டது. எங்களிடம் பணம் இல்லை. எனது தோட்டினை வைத்துக் கொள்ளுங்கள் என தனது காதிலுள்ள தங்க தோட்டினை அவரிடம் தந்தார். ஆனால் கடைக்காரனோ அதெல்லாம் முடியாது. எனக்கு பணம்தான் வேண்டும். என்னை ஏமாற்றாதே! என மறுத்துவிட்டார். இப்படி நடந்து கொண்டிருந்த காட்சியை இவர்களைப் போலவே மதுரையில் இருந்து சுற்றுலா வந்திருந்தவர்கள் அதே ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் இதை பார்த்துக் கொண்டிருந்தார். சென்னையில் இருந்து வந்தவரது சூழ்நிலையைப் புரிந்து கொண்டு இவர் தானே வலிய சென்று அந்த ஹோட்டல் முதலாளியிடம் ஐயா அவரது பில் தொகை எவ்வளவு? அதை நானே தந்து விடுகிறேன். அவரை அவமானப்படுத்தாதீர்கள். அவரை விட்டு விடுங்களென கூறி முன்பின் தெரியாத அவர்பால் அன்பு கொண்டு அவருக்காக இவர் பில்லைக் கட்டி அவரை தக்க சமயத்தில் காப்பாற்றி அவரது மானத்தை காப்பாற்றி அனுப்பி வைத்தார்.

சென்னையிலிருந்து வந்த அந்த குடும்பத்தினர் அவர் செய்த பிரதிபலன்பாராத அந்த உதவியை எண்ணி மதுரை நபரது விலாசம் முகவரி போன்றவற்றை வாங்கிக்கொண்டு தங்களை என் வாழ்நாளில் மறக்க மாட்டேன். ஊருக்கு சென்ற உடனே பணம் அனுப்புகிறேன் என சொல்லிவிட்டு சென்னை சென்றனர். சென்னை சென்ற உடன் தனக்கு உள்ள தொகையில் சுமார் பத்து இலட்சம் பெறுமானமுள்ள தொகையை எடுத்துக் கொண்டு அந்த உதவி செய்த நபரின் விலாசத்தை தேடி கண்டுபிடித்து அந்த தொகையை உதவி செய்தவரிடம் கொடுத்தார். உதவி செய்தவரோ திகைத்துவிட்டார். என்ன ஐயா? தாங்கள் எதற்காக இந்த பெரிய தொகையை என்னிடம் கொடுக்கிறீர்கள் எனக் கூறி தடுமாறினார். சென்னையில் இருந்து வந்த செல்வந்தரோ, தக்க சமயத்தில் யாரென்றும் தெரியாத ஒருவர், எனது தன்மை என்னவென்றும் யோசிக்காமல் என்னையும் எனது குடும்பத்தினரையும் பொது இடத்தில் மானம் போகாமல் தக்க சமயத்தில் காப்பாற்றினீர்கள். தாங்கள் தக்க சமயத்தில் செய்த, அந்த உதவிக்கு முன் நான் கொடுக்கும் தொகை கடுகளவாகும் எனக்கூறி அந்த பத்து இலட்சத்தையும் மதுரை நபருக்கு கொடுத்து மகிழ்ந்தார்.

ஒரு கிராமத்தில் விவசாயக் குடும்பம் வசித்து வந்தது. அந்த குடும்பம் வசித்துவந்த பக்கத்து வீட்டுக்காரர், விளைநிலங்களைக் கொண்ட ஒரு செல்வந்தர். ஒரு சமயம் அந்த விவசாய குடும்பத்தின் தலைவி கர்ப்பமுற்று இருந்தாள். அவளது குழந்தை பேறுகாலம் ஒரு வாரத்தில் என மருத்துவர்கள்

கூறினார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய வேலையாக அந்த குடும்பத்தலைவன் மனைவியை தனியே விட்டுவிட்டு வெளியூர் செல்ல வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டதால் வெளியூர் சென்றிருந்தான். அந்த சமயத்தில் அந்த பெண்மணிக்கு கடுமையான பிரசவவலி ஏற்பட்டு துடித்துப் போய்விட்டாள். இதைக் கண்ட பக்கத்து வீட்டுக்காரர் அடடா! இந்த பெண் இவ்வளவு கஷ்டப்படுகிறாளே உதவ வேண்டுமென எண்ணி செல்வந்தரின் மனைவியும் அவரும் ஒன்றும் சிந்திக்காமல் தங்களுடைய காரை எடுத்துக்கொண்டு வலியால் துடித்த அந்த பெண்ணை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள நகரத்திற்கு சென்று தக்க சமயத்தில் மருத்துவமனையில் சேர்த்து நலமாக பிரசவிக்க எல்லா உதவிகளும் செய்து கூடவே இருந்து உதவி செய்து தாயும் சேயும் நலமாக இருக்க உதவி செய்தனர். காலையில் அந்த விவசாயிக்கு தகவல் அனுப்பி வரசொல்லி அவன் வசம் தாயையும் சேயையும் ஒப்படைத்தனர். மருத்துவர்கள் தக்க சமயத்தில் அவர்கள் மருத்துவமனைக்கு வந்து சேர்த்தனர். இது தலைப்பிரசவம் எனவே தக்க சமயத்தில் வராவிட்டால் ஏதேனும் இடையூறு ஏற்பட்டு ஏதாவது ஒரு உயிரைத்தான் காப்பாற்றியிருக்க முடியும். பெண்ணை கூட்டிவந்து சேர்த்தவர்க்கு நன்றி சொல்லுங்கள் என மருத்துவர் கூறினார். அவனும் அவர்களை சந்தித்து தனது நன்றிகளை சொன்னான்.

சில காலம் சென்றபின் செல்வந்தரது நிலங்களை பராமரித்துவந்த குத்தகைக்காரர் நிலங்களை பராமரிக்காமல் விட்டுவிட்டு சென்றதால் அவரது விவசாய நிலங்கள் கவனிப்பாரற்று குடும்பத்திற்கு வருவாய் குறைய ஆரம்பித்தது. அதனால் அந்த குடும்பம் மிகவும் சிரமப்பட்டது. இதைக் கண்ட விவசாய குடும்பம் அடடா! நாம் கேட்காமலேயே உதவி செய்தவர் குடும்பத்திற்கு ஒரு கஷ்டம் என்றால், நாம் சும்மா இருப்பதா என எண்ணி செல்வந்தரிடம் சென்று தோட்டத்தை நான் பார்த்து சரி செய்து நல்லபடி விவசாயம் செய்து தருகிறேன். தாங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் எனக்கூறி தானும் தனது குடும்பத்தாருடனும் உறவினர்கள் அனைவரும் சேர்ந்து அவரது நிலத்தில் பாடுபட்டு ஏற்பட இருந்த இழப்பை சரிசெய்ததுடன் கூடுதல் மகசூலையும் பெற்று தந்தான். செல்வந்தர் இந்த நன்றி மறவா செயலை எண்ணி அவனையே தனது நிலங்களை காலம் உள்ளவரை பார்த்துக் கொள்ள சொன்னார். அதன்பின் இருவரும் நண்பர்களாகி ஒரு தாய் பிள்ளைகள் போல ஆனார்கள். ஒருவன் காலத்தால் செய்த உதவி சிறிதாய் இருப்பினும், உதவி செய்யப்பட்ட காலத்தை எண்ணி என்றும் மறக்கக்கூடாது.

அதேபோல மற்றொரு கிராமத்தில் இரு இனத்தவர்களிடையே இனக்கலவரம் மூண்டது. மேல் இனத்தைச் சேர்ந்தவர்களும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களும் ஒருவருக்கொருவர் பகைக்கொண்டு கலவரத்தில் ஈடுபட்டு பெரும் இழப்புகள் ஏற்பட ஏதுவாயிற்று. அப்படி கலவரத்தின்போது ஒரு இரவு, மேல்இனத்தின் தலைவர் தனியாக தாழ்த்தப்பட்ட இனத்தவர் வசிக்கும்

பகுதிக்கு அருகில் உள்ள சாலை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். கலவரத்தால் பாதிக்கப்பட்ட தாழ்ந்த இனத்தை சேர்ந்தவர்கள் அவரை கண்டவுடன் பகை கொண்டு அவனை விடாதே பிடி! கொல்! என்று கூச்சலிட்டு கொண்டே தாக்க முற்பட்டனர். தனியாக உள்ள தலைவரோ, என்ன செய்வதென்று அறியாமல் தாழ்த்தப்பட்ட இன மக்கள் வசிக்கும் பகுதிக்குள் புகுந்து ஓடி ஒரு வீட்டில் ஒளிந்து கொண்டார். அந்த வீட்டில் உள்ளவன், அவரது பயத்தைப் பார்த்து மிகவும் வருந்தினான். தலைவரைப் பார்த்து பயப்படாதீர்கள் தங்களுக்கு எந்த இடையூறும் வராது. நான் காப்பாற்றுகிறேன். இங்கேயே இருங்கள். அமைதி ஏற்பட்ட உடன் வீட்டிற்கு செல்லுங்கள். நான் பாதுகாப்பாய் இருப்பேனென பலவாறு ஆறுதல் கூறி அவரது பயத்தை போக்கினான். அதே சமயம் துரத்தி வந்தவர்கள் அவனது வீட்டை நோக்கி நெருங்கி, எங்கே இந்த பக்கம் தலைவர் ஓடி வந்தார், உன் வீட்டில்தான் இருக்க வேண்டும். வேறு எங்கும் செல்ல வாய்ப்பில்லை. யாரேனும் இருந்தால் வெளியே அனுப்பு, இல்லையென்றால் நாங்கள் சோதனை செய்ய நேரிடும் என்றார்கள். அவர்களது வெறிச்செயலைப் பார்த்து, ஐயா இங்கே யாரும் இல்லை. குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை அம்மை போட்டுள்ளது. யாரும் உள்ளே வரவேண்டாம். தயவு செய்து எல்லோரும் வெளியே சென்றுவிடுங்கள் என பொய் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தான். அவர்களும் சென்றுவிட்டனர். பின்னர் சந்தடிகள் ஓய்ந்தபின் வெகுநேரம் சென்று தலைவரை தனது சைக்கிளிலேயே பாதுகாப்பாக அவரது வீட்டில் கொண்டு சென்று விட்டான். மரணபயத்திலிருந்த தலைவர் உள்ளம் தெளிந்து, தனது இனத்தாரைக் கூட்டி எல்லோரும் ஒரு தாய் மக்கள், நமக்குள் பாகுபாடு வேண்டாம். இதனால் உயிர்கள் பலியாகின்றன. எனவே அனைவரும் பகையை மறந்து நட்பாகி விடுவோம் என பலவிதமாக அறிவுரைகள் சொல்லி அதன்பின் உயர்இனமும், தாழ்ந்த இனமும் என்ற பாகுபாடுகள் நீங்கிய கிராமமாக அக்கிராமத்தை மாற்றினார் தலைவர். இதனால் ஏற்பட இருந்த பெருஇனக்கலவரம் தடுக்கப்பட்டு பல உயிர்கள் பலியாவதும் தடுக்கப்பட்டது. அதன்பின் ஒரு சமயம் அந்த காப்பாற்றியவரது பிள்ளை படிக்க வசதி இல்லாமல் மேற்படிப்புக்கு செல்ல முடியாமல், படிப்பை பாதியில் நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட தலைவர் அந்த பையனுடைய அனைத்து படிப்பு செலவுகளையும் தானே ஏற்றுக்கொண்டு அவனை தனது மகன் போல பார்த்து வேலைவாங்கிக் கொடுத்து எல்லா உதவிகளும் செய்து அக்குடும்பத்தையே ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தார். இப்படி தக்க சமயத்தில் செய்த உதவியை தலைவர் மறவாமல் தனக்கு உதவி செய்ததற்கு உதவி செய்தார்.

ஒரு சிறிய நகரத்தில் உள்ள சாலையில் ஒரு பன்னிரெண்டு பதிமூன்று வயது பையன் ஆர்வத்தின் காரணமாக இருசக்கர வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் சரியாக ஓட்ட தெரியாமல் வேகமாக ஓட்டிக்

கொண்டிருந்தான். அவன் அப்படி ஓட்டிக் கொண்டிருந்தபோது, திடீரென சாலை ஓரத்தில் இருந்த ஒரு வீட்டிலிருந்த ஒரு சிறு குழந்தை சாலையின் நடுவே ஓடி வந்துவிட்டது. வண்டியை ஓட்டிய சிறுவனோ திடீரென இப்படி குழந்தை ஓடி வந்ததால் பதட்டமடைந்து என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறி அக்குழந்தை மேல் வாகனத்தை மோதிவிடுவது போல் ஓட்டத்துவங்கினான். இந்த சூழ்நிலையில் சாலையில் சென்று கொண்டிருந்த பெண் ஐயோ! குழந்தை என்று தன்னைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஓடிச்சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள். நல்ல வேளை வாகனம் குழந்தை மேல் மோதாமல் விபத்து தவிர்க்கப்பட்டது. இதைப் பார்த்து வீட்டிலிருந்து ஓடி வந்த அந்த குழந்தையின் தாய் தனது குழந்தையைக் காப்பாற்றிய அந்தப் பெண்ணை வீட்டிற்கு உள்ளே அழைத்துச் சென்று அவளை சாப்பிட வைத்து பின் தனது கழுத்திலிருந்த ஐந்துபவுன் தங்க சங்கிலியை அந்த பெண்ணின் கழுத்தில் போட்டு விட்டாள். தக்க சமயத்தில் எனது குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய உனக்கு எவ்வளவு உதவி செய்தாலும் தகும். என்னால் முடிந்ததை தருகிறேன் எனக்கூறி அவளை வாழ்த்தி அனுப்பினாள்.

இப்படி அநேகம் அநேகம் உதாரணம் சொல்லலாம். ஒருவர் நமக்கு செய்த உதவிக்கு உடனேயோ அல்லது சந்தர்ப்பம் ஏற்படும் போதோ, எப்படி நம்மை கேட்காமலே தானே முன் வந்து உதவி செய்தார்களோ, அதே போல் உதவி செய்தவர்கள் கேட்காமலேயே அவரது துன்பத்தை உணர்ந்து நாமாகவே முன்சென்று உதவி செய்து நன்றி மறவாத வாழ்வை வாழ்ந்தால் நாமும் நலம் பெறலாம். அதை விட்டுவிட்டு ஒருவன் செய்த உதவியை மறந்து நன்றி மறத்தல் ஆகிய செயலை ஒருவன் செய்தால் அவன் எத்தகைய சூழ்நிலைக்கு ஆளாவான் அவன் படும் துன்பங்கள் என்னென்ன என்பதை மகான் திருவள்ளுவபெருமான் தெளிவுபட தமது திருக்குறளில் செய்ந்நன்றி அறிதல் என்ற தனி அதிகாரத்தில் கூறியுள்ளார்கள்.

## செய்ந்நன்றி அறிதல்

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும், விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

102. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

இன்னபயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

105. உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

106. மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது; துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

108. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

முன் உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

– நன்றி முனைவர் மு.வரதராசனார்.

நன்றி மறப்பது குற்றம்தான் ஆனால் அதையும் மன்னிக்கலாம். ஆனால் ஒருவன் மனமுவந்து செய்த உதவியை மறந்து உதவி செய்தவனுக்கே தீங்கு செய்தால் அவன் மீளா நரகத்திற்கு போவான். இங்கு செய்நன்றி மறத்தல் என்ற சொல்லை பயன்படுத்தாமல் செய்நன்றி கொன்ற என்ற சொல்லை மகான் வள்ளுவபெருமான் பயன்படுத்தியதால் இக்கருத்து இங்கே சொல்லப்பட்டது. – குருநாதர்.

இங்கே உதவி செய்பவன் செய்த உதவியின் அளவை பாராது அந்த உதவி எப்படிப்பட்ட சூழ்நிலையில் செய்யப்பட்டது, அந்த உதவியினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதை பொறுத்துதான் உதவியின் தன்மையானது அமைவதால் உதவி செய்தவருக்கு தக்க சமயத்தில் செய்ந்நன்றி மறவாதிருந்து உதவ வேண்டும். அப்படி உதவிகளின் தன்மை, அதைப்பற்றி விளக்கங்கள் சொன்ன ஆசான் திருவள்ளுவர் இறுதியில் நூற்றிபத்தாவது குறளில் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதன் மூலம் இவ்வுலகில் ஒருவர் அடாத பாவச்செயல்கள் செய்தாலும் அதிலிருந்து விடுபட ஒரு விமோசனம் உண்டு. ஆனால் தக்க சமயத்தில் செய்த உதவியை ஒருவன் மறந்தால், அவனுக்கு விமோசனமே இல்லையென வலியுறுத்துவதன் மூலம் செய்ந்நன்றி மறத்தல் ஒருவனது வாழ்வையும் ஆன்மாவையும் எப்படியெல்லாம் பாதிக்கும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

மகான் உலகநாதபுலவர் தமது உலக நீதியில் எட்டாவது கவியில்,

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்

எனக் கூறுவதன் மூலம் ஒருவன் செய்த உதவியை, நன்றியை எக்காலத்தும் மறக்கக்கூடாது என வலியுறுத்துகிறார்.

ஒருவனுக்கு செய்த உதவியின் தன்மையை உணரக்கூடிய நன்றி அறிதல் என்பதை அறியவே ஒருவன் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் உதவி செய்தவன் செய்த உதவியை உணரமுடியாமல் போய், பாவியாகிவிடுவான். பெரியோர் தொடர்பில் இருந்தால்தான் தமக்கு உதவி செய்தவருடைய துன்பம் களைந்து நாம் பாவத்திலிருந்து விடுபட வேண்டுமென்ற உணர்வே வரும்.

ஒரு மனிதன் செய்த உதவிக்கு சாதாரண மனிதனானவன் உடனேயோ அல்லது சில காலம் கழித்தோ உதவிப் பெறப்பட்டவனால் அந்த உதவி உணரப்பட்டு கிடைக்கும். அதே ஒரு சமூக சான்றோனுக்கு உதவி செய்தால், அந்த சான்றோன் தனக்கு உதவி செய்தவன் வாழ்நாள் முழுதும் அவன் செய்த உதவியை எண்ணி அவனுக்கு இடர் வரும் போதெல்லாம் காப்பான். ஆனால் ஒரு முற்றுப்பெற்ற முழுமைப்பெற்ற ஞானிகளுக்கோ அவர்கள் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கோ ஒருவர் உதவி செய்ய வாய்ப்பு கிடைத்து தக்க சமயத்தில்

அவன் உதவி செய்வானேயானால் அவன் செய்த அந்த உதவி ஞானிகள் மனதில் பதிந்து விட்டால் அவன் செய்த உதவியை ஞானிகள் ஆன்மாவில் பதிந்து அவன் செய்த உதவிக்கு நன்றி மறவாமல் இந்த ஜென்மத்தில் அவனும் அவனது சுற்றத்தார்களுக்கும் பாதுகாப்பாய் இருப்பார்கள். இந்த ஜென்மம் முடிந்து எத்தனை ஜென்மம் அவன் எடுத்தாலும், அவன் எங்கே பிறந்தாலும், அவன் ஜென்மந்தோறும் பிறக்கின்ற இடத்தை தேடிச்சென்று அவனையும், அவனது சுற்றத்தாரையும் வாழ்வாங்கு வாழவைத்து தமது நன்றி உணர்ச்சியை காண்பித்து காப்பாற்றுவார்கள். ஏனெனில் ஞானிகள் வர்க்கமே "நன்றி மறவாமை" என்ற ஒரு தனித்துவமான கொள்கையில்தான் இந்த ஞானவாழ்வே அமைந்துள்ளது. எனவே சாதாரண மனிதன் நன்றி மறக்கக் கூடாது. ஞானவாழ்வை விரும்புபவன் நன்றி மறத்தல் கூடாது என்பதை தனது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ்தல் வேண்டுமென மகான் ஔவையார் கூறுகிறார்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு,

தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

# தைப்பூச விழா

நாள் : **27.01.2013 - ஞாயிற்றுக்கிழமை, காலை 6 மணி முதல்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

அன்புடையீர் வணக்கம்,

துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் சார்பாக நடைபெறும் தைப்பூச விழாவில் கலந்துகொண்டு ஞானிகளின் ஆசிபெற அன்புடன் அழைக்கின்றோம். அது சமயம் ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

அனைவரும் தைப்பூச விழாவில் கலந்து கொண்டு அருட்பிரகாச வள்ளலார் ஆசியும், குருநாதர் ஆசியும் பெற அன்புடன் அழைக்கிறோம்.

**தைப்பூச விழாவை முன்னிட்டு 2013 ஜனவரி மாதம் பௌர்ணமி திருவிளக்கு பூஜை இல்லை என்பதை தெரியப்படுத்துகிறோம்.**

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை

ஓம் அகத்தியர் துணை

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி



சித்தர்கள்தான் கடவுள் என்று உலகிற்கு வழிகாட்டிய
பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.

– திருமந்திரம் – பக்குவன் – கவி எண் 1701.

**ஞானிகளை வணங்குவோம் ஆசி பெறுவோம்**
**அன்னதானம் செய்வோம் இன்புற்று வாழ்வோம்**

குரு அருள்வேண்டி...

**RS BUDGET HOTEL,**

CONT NO:- + 6012 - 2081406, E-Mail - rekhavs@streamyx.com

Address:
9-3, Jalan Taming Permai 1, Kawasan Perniagaan Taming Permai,
Off Jalan Balakong, 43300 Selangor, Malaysia.
Tel No: +603 - 89459100

23A, Jalan Bandar Baru Rawang 10,
Bandar Baru Rawang, 48000 Rawang, Selangor, Malaysia.
Tel No: +603 - 60907100, Fax: +603 - 87376717

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். —குறள்.

# அகத்தியர் எண்டர்பிரைசஸ்

# AGATHIAR ENTERPRISES

First Floor, Old No.152/New No.72,
Arcot Road, (Above Nilgiris)
Valasaravakkam, Chennai-87.

**✆ 044–42123236, 42653232.**

green trends
HAIR & STYLE SALON
Highly professional Hair & Skin Services for Women, Men & Kids

# பதஞ்சலி எண்டர்பிரைசஸ்

# PATHANJALI ENTERPRISES

No.4/1, Karpagambal Nagar,
Ramapuram,
Chennai-89.

**✆ 044–42652002, 42662002.**

ஓம் அகத்தியர் துணை

# ஓங்காரக்குடில் வெளியீடுகள் . . .

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு | ரூ.5 |
| 2. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ.45 |
| 3. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ.40 |
| 4. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ.50 |
| 5. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ.30 |
| 6. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ.25 |
| 7. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ.60 |
| 8. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ.15 |
| 9. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ.15 |
| 10. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ.40 |
| 11. | ஞானத்திருவடி ஆண்டு மலர் | ரூ.150 |
| 12. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ.30 |
| 13. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி | ரூ.50 |
| 14. | புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி | ரூ.50 |
| 15. | ஆத்திசூடி விளக்கவுரை | ரூ.50 |
| 16. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

## ஈரோடு பகுதி மக்கள்

தினசரி, மாதாந்திர காலண்டர், பதினெண்சித்தர் படங்கள் பெறவும்

**ஞானத்திருவடி** மாத இதழ்

புதிய சந்தாவிற்கும், சந்தா புதுப்பிக்கவும்,

குருநாதர் அருளிய ஆன்மீக நூல்களைப் பெறவும்

அணுகவேண்டிய முகவரி



குருநாதர்

Cityland Courier,

S.**முத்து,**

48/88, N.M.S காம்பவுண்ட், K.K.B பில்டிங்,

**ஈரோடு - 638001.**

செல் – 93645 71875

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடில், குருநாதர், சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும், **www.agathiar.org** என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

மகான் சட்டைமுனிநாதர் அருளிய

## பக்தி செலுத்த அறிவுரை

போடுவது திலதமடா மூலர் மைந்தர்
    போகர் கருவூராரைத் தியானம் பண்ணு
நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து
    நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா
ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று
    எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை
தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்
    செப்பாதே இக்கருவை (ரகசியத்தை) உலகத்தோர்க்கே.

ஞானவிளக்கம் 51–ல் 21–ஆம் பாடல்

குரு அருள்வேண்டி . . .

**மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்**

# அன்னை மருத்துவமனை, துறையூர்.

ஓம் அகத்தியர் துணை



மகான் சுப்ரமணியர்



மகான் அகத்தியர்



மகான் இராமலிங்கர்



பரமானந்த சதாசிவ சற்குரு குருநாதர், தவத்திரு
**ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

தானமும் தவமும் தான்செய் வாராகில்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.
– ஔவைக்குறள்.

குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு
அரூபமாய் நிற்குஞ் சிவம்.
– ஔவைக்குறள்.

# குரு அருளே திருவருள்

<u>திருமூலர் சங்க அறப்பணிகள்</u>

- ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிதோறும் அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் நடைபெறும்.
- மாதந்தோறும் கடைசி ஞாயிறு அன்று சித்தர்கள் வழிபாடும் திருவிளக்கு பூஜையும் நடைபெறும்.
- மாதந்தோறும் 200 ஏழைஎளிய குடும்பத்தினருக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை மாவு, பருப்பு, சமையல் எண்ணெய், பால் மாவு ஆகியவை இலவசமாக வழங்குகிறோம்.
- ஏழைஎளிய மாணவர்களுக்கு அன்னதானமும், இலவச ஆடையும், பள்ளி சென்று வர வாகனவசதியும் செய்கிறோம்.

<u>குரு அருள்வேண்டி...</u>

P.K.T.M

A.ANANTHAN, MALAYSIA

**PERSATUAN KEBAJIKAN THIRUMULAR MALAYSIA**

(also known as) Reg. No : 1821-03-7

*AGATHIAR CHARITY ORGANISATION MALAYSIA*

LOT 6718, KAMPUNG BATU 1, JALAN AIR HITAM, 43800 DENGKIL, SELANGOR,
PH : +60 3 87689299/7599, Web : www.agathiar.org, www.thirumular.org
Email - info@thirumular.org, info@agathiar.org

ADVT

அருட்பெருஞ்சோதி　　ஓம் அகத்தியர் துணை　　அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை　　அருட்பெருஞ்சோதி


அருள்ஜோதி முருகன்


மகான் அகத்தியர்


அருட்பெருஞ்ஜோதி


வள்ளலார்


குருநாதர்

## PERTUBUHAN KEBAJIKAN
## SRI AGATHIAR ARANGGAR SANMAARKA SANGGAM,


NO 28, JALAN 2, TAMAN SEMARAK,
SG CHUA 43000, KAJANG, SELANGOR, MALAYSIA.
REG. NO : 1793-09-SEL, Bank A/c No - CIMB - 12680001363054
PH - 03 87391867, FAX - 03 87365740, Web - agathiar.webs.com,
Email - cvraja2004@yahoo.com, agthiarmalaysia@yahoo.com


### ஸ்ரீ அகத்தியர் அரங்கர் சன்மார்க்க சங்க செயல்பாடுகள்

- ✯ ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமைதோறும் மாலை 7.30 மணியளவில் ஞானியர்கள் வழிபாடு நடைபெறும்.
- ✯ ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திருவிளக்கு பூஜை நடைபெறும்.
- ✯ மாதந்தோறும் 70 ஏழைஎளிய குடும்பத்தினருக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை மாவு, பருப்பு, சமையல் எண்ணெய், பால் மாவு ஆகியவை இலவசமாக வழங்குகிறோம்.
- ✯ ஏழைஎளிய மாணவர்களுக்கு அன்னதானமும், இலவச ஆடையும், வழங்குகிறோம்.

### வேண்டுகோள்

- ✯ ஓம் அகத்தீஸ்வரா மலேசியாவில் உள்ள எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ அருள்புரிய வேண்டுகிறோம்.
- ✯ ஓம் அகத்தீஸ்வரா பொருளுதவி செய்கின்ற மக்களுக்கு நீடிய ஆயுளும், நிறைந்த செல்வமும், நோயில்லா வாழ்வும் பெற்று சிறப்புடன் வாழ அருள்புரிய வேண்டுகிறோம்.

அன்னதானத்திற்கு பொருளுதவி செய்ய விரும்புவோர், ஞானிகள் திருஉருவப்படங்கள், ஆசான் அருளிய நூல்கள், ஆசான் அருளுரைகள் மற்றும் ஞானத்திருவடி நூல் வேண்டுவோர் தொடர்புகொள்ள :–

CONT FOR - Mr. RAJASEGAR, KL - 019 2704782
Mr. VILLASAMY, KEDAH - 019 5184744

குரு அருள்வேண்டி...

**SRI AGATHIAR ARANGGAR SANMAARKA SANGGAM,**
**KAJANG**

ADVT

அருட்பெருஞ்சோதி ஓம் அகத்தியர் துணை அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி



அறிவுக்கு அறிவாய் விளங்கும்
**அருள்ஜோதி முருகன்**

## முருகா என்று சொன்னால், முன்னின்று அருள்வான்
## முருகா என்று சொன்னால், முன்வினை தீர்ப்பான்

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்

மாதா பிதா குரு தெய்வமாக விளங்கும் எங்களது குருநாதர்
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகளின்**
அருளாசி வேண்டி...

S.P.**பிரியா B.Sc., B.Ed.,**
LIC இன்சூரன்ஸ் ஆலோசகர்,
சேடபாளையம், நாரணாபுரம் – **641664,**
பல்லடம் (Tk.), திருப்பூர் (Dt.)
**94861 87657, 89034 77657**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

– மகான் ஔவையார் – மூதுரை – கவி எண் 8.

ந்தியர் துணை

**என்னாலை**

**ன் தனைபெ**



**வடலூர் வள்ளல் பெருமா**

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூ**

**எல்லா உயிரும் தொழும்.** – திருக்குறள்

"சிவாய ரெங்கராஜ தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,
சென்னை – 600 026.
✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,
சென்னை – 600 026.
Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

அகத்தியர் துணை

# மகான் அம்பிகானந்தர்
# டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

பெருமாள் கோவில் தெரு, பிரசன்ன மஹால் எதிரில்,

## துறையூர்.

Regency

JOHNSON TILES

Parryware

Neycer

குரு அருள் வேண்டி . . .

ASR.**ராஜா** S.**திருமுகம்**

98435 68696 98431 58696

# லட்சுமி கிரில் டிசைன்ஸ்

எல்லாவிதமான மாடர்ன் கிரில் வேலைகளும்,

மாடர்ன் பர்னிச்சர் வேலைகளும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 15/–

*கவனகரின்*

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

## கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

## இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

4, இராகத் குடியிருப்பு, 2/746, கசூராத் தோட்டம், இரண்டாம் தெரு, நீலாங்கரை, சென்னை–41. ✆ 044–24490826.

மற்றும்

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

---

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை உயிர்பல நிகழ்உறு பொருள்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை நிலைபல நிலைஉறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்உறு பக்குவ நிறைவுறு பயன்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்இயல் பலபல நிறைத்து அதில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

**ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு**

குரு அருள் வேண்டி . . .

**ANU BUILDERSS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.66, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 601 302.
Phone: 2277 0495,
Cell : 94440 70495,
E-mail : anubuilders@yahoo.com

அகத்தியர் துணை

நிறுவனர், சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு **ரெங்கராஜதேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | ஆசான் அகத்தீசர் ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **காலை 11 & 1** | சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு<br>தவத்திரு **ரெங்கராஜதேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மதியம் 12.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு<br>தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம் |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

**சந்தா படிவம்**

☐ 1 வருட சந்தா ரூ.120/– ☐ 3 வருட சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________

முகவரி : ______________________

______________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

போன் : (வீடு) ____________ (அலுவலகம்) ____________

(செல்) ______________________

சந்தா செலுத்தும் முறை

☐ ரொக்கம் ☐ DD வரைவோலை ☐ MO–மணியார்டர்

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

தேதி :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................. தேதி : .................. ரூபாய் : ..................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்.

# உங்கள் பகுதியில் காலண்டர் கிடைக்கும் இடங்கள்

| | | |
|---|---|---|
| சென்னை | K.S.கைலாசம், கீழ்பாக்கம் | 98400 63510 |
| சென்னை | ராமஜெயம், வடபழனி | 97860 23155 |
| சென்னை | A.பத்மநாபன், திருவொற்றியூர் | 94456 33917 |
| செங்கல்பட்டு | J.கணேஷ் | 94457 35389 |
| பாண்டிச்சேரி | நிரஞ்சனா | 94891 47578 |
| சேலம் | G.முத்து | 96267 04849 |
| கோவை | K.S.ஸ்ரீதர், காட்டூர் | 98420 69458 |
| கோவை | கிருஷ்ணமூர்த்தி, பெரிய கடை வீதி | 98947 49339 |
| கோவை | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| கோவை | ரவிச்சந்திரன், சுந்தராபுரம் | 88700 13009 |
| பொள்ளாச்சி | S.T.முத்துசாமி, (உடுமலை & பொள்ளாச்சி) | 98945 37161 |
| ஈரோடு | முத்து | 93645 71875 |
| பெருந்துறை | மோகன்காந்தி | 96889 70130 |
| கவுந்தபாடி | ஜெகநாதன் | 90037 30741 |
| கோபி | கோடீஸ்வரன் | 99443 97609 |
| மதுரை | குமரகுரு | 94862 09020 |
| இராமநாதபுரம் | சிவசங்கரன் | 98426 23117 |
| விருதுநகர் | சங்கர் | 97870 06585 |
| விருதுநகர் | நெல்சன் | 94431 46681 |
| திருநெல்வேலி | K.சரவணன் | 93677 55008 |
| ராஜபாளையம் | மீனாட்சிசுந்தர்ராஜ் | 96299 46777 |
| தூத்துக்குடி | V.A.பாஸ்கர் | 98650 84856 |
| நாகப்பட்டினம் | N.சிங்காரவேலு | 94432 24532 |
| வேதாரண்யம் | N.R.ராஜேந்திரன் | 99764 80562 |

பௌர்ணமி அன்று திருவண்ணாமலை கிரிவலப்பாதையிலும்,
அமாவாசை அன்று சேலம், சித்தர் கோவில்,
அருள்மிகு கஞ்சமலைச்சித்தர் கோவிலிலும்
ஓங்காரக்குடிலின் அனைத்து வெளியீடுகளும் கிடைக்கும்.
தொடர்புக்கு –

**மா.சீனிவாசன்**, திருவண்ணாமலை – 99448 00493

மற்ற பகுதிகளில் உள்ளோர் ஓங்காரக்குடிலை தொடர்பு கொள்ள...

**க.இரவிச்சந்திரன் – 94883 91565**